# துர்ப்பிரயோகம் என்பது எந்த மொழியிலும் தவறுதான்

ABUSE IS WRONG IN ANY LANGUAGE

La maltraitance est inacceptable peu importe la langue

Waxyeeladu waa khalad luqad walba

El abuso es condenable en cualquier idioma

Жестокое обращение недопустимо на любом языке

학대는 언어를 막론하고 그릇된 것입니다

بدسلوکی کسی بھی زبان میں غلط ہے

بد رفتاری در هر زبان غلط است

إساءة المعاملة مرفوضة في جميع اللغات

虐待是有悖文明的恶行

ਦੁਰਵਿਵਹਾਰ ਕਿਸੇ ਵੀ ਭਾਸ਼ਾ ਵਿੱਚ ਗ਼ਲਤ ਹੈ।

Department of Justice Canada
Ministère de la Justice Canada
Canada

இந்த சிற்றேட்டுக்கு பங்களிப்பு செய்த ஷீல்டு ஆப் அதேனா (Shield of Athena) அமைப்புக்கு கனடா நீதி திணைக்களம் நன்றி தெரிவிக்கிறது.

கனடா நீதி திணைக்களம் மேற்கொண்டுள்ள குடும்ப வன்முறை தடுப்பு திட்டத்துக்கமைய பொதுமக்களுக்கு சட்டதிட்ட அறிவுறுத்துரையும் தகவலும் வழங்கவென ஆக்கப்பெற்ற வெளியீட்டுத் தொடரில் இது ஒன்று.
இத்தொடருள் இடம்பெறும் பிற வெளியீடுகள்:
- துர்ப்பிரயோகம் தவறு (Abuse is Wrong)
- சிறுவர் மீதான துர்ப்பிரயோகம் தவறு: நான் என்ன செய்யலாம்? (Child Abuse is Wrong: What Can I Do?)
- முதியோர் மீதான துர்ப்பிரயோகம் தவறு (Elder Abuse is Wrong)

இவ்வெளியீடுகள் எவற்றையும் இணையமூலம் பார்க்க, பின்வரும் இணைப்பை நாடவும்:
www.justice.gc.ca, ("Search") என்பதில் வெளியீட்டின் ளியீட்டின் தலைப்பை இட்டு தேடவும்.

பதிப்புரிமை: உரிமைவழி கனடாவின் மாட்சிமை தங்கிய அரசியாரின் பெயரில் கனடாவின் நீதி அமைச்சர், மற்றும் சட்டத்துறை அதிபதி, 2012

ISBN 978-0-662-03679-1
Catalogue No. J2-131/2012Ta-PDF

Aussi offert en français sous le titre :
*La maltraitance est inacceptable peu importe la langue*

பிரதி அனுமதி

வேறுமாதிரி குறிப்பிட்டாலொழிய, இந்த வெளியீட்டில் அல்லது ஆக்கத்தில் இடம்பெற்றுள்ள தகவல்களை கட்டணம் செலுத்தாது அல்லது மேற்கொண்டு அனுமதி பெறாது தனிப்பட்ட அல்லது வியாபாரம்சாராத நோக்கங்களுக்கு எந்த விதத்திலும் அரைகுறையாகவோ முழுமையாகவோ பிரதிசெய்யலாம்.

தயவுசெய்து:
- தகவல்களை வழுபடாது பிரதியெடுத்து பயன்படுத்துவதில் உரிய அக்கறை செலுத்தவும்.
- பிரதிசெய்யும் வெளியீடுகளின் முழுமையான தலைப்புகளையும், அவற்றை ஆக்கிய அமைப்பையும் சுட்டிக்காட்டவும்.
- சம்பந்தப்பட்ட பிரதி, கனடா அரசு அதிகாரபூர்வமாக வெளியிட்ட ஆக்கத்தின் பிரதி என்பதையும், அது கனடா அரசுடன் இணைந்து அல்லது அதன் வழிமொழிவுடன் ஆக்கப்பெற்றதல்ல என்பதையும் சுட்டிக்காட்டவும்.

கனடா அரசின் பதிப்புரிமை நிர்வாக அமைப்பாகிய கனடா பொது பணி – அரசாங்க சேவைகள் துறையின் அனுமதியை எழுத்தில் பெற்றுக்கொள்ளாமல் வியாபார நோக்கங்களுக்காக இவற்றை பிரதிசெய்வதும் விநியோகிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கனடா பொது பணி – அரசாங்க சேவைகள் துறையுடன் தொடர்புகொள்ளவும்.
அதற்கான தொலைபேசி இலக்கம்: 613-996-6886 அல்லது இணையத்தளம்: droitdauteur.copyright@tpsgc pwgsc.gc.ca.

(Tamil)

# பொருளடக்கம்


- வாசகருக்கு (**2**)
- துர்ப்பிரயோகம் என்றால் என்ன? (**4**)
- உடல்ரீதியான துர்ப்பிரயோகம் (**7**)
- பாலியல் துர்ப்பிரயோகம் (**15**)
- உணர்வு துர்ப்பிரயோகம் (**19**)
- நிதி துர்ப்பிரயோகம் (**23**)
- உதாசீனம் (**24**)
- நெருங்கிய துணைவர் வன்முறை (**25**)
- முதியோர் துர்ப்பிரயோகம் (**27**)
- குழந்தை துர்ப்பிரயோகம் (**30**)
- தங்கியிருத்தல் அல்லது விட்டுசெல்லுதல் (**34**)
- யார் உதவ முடியும்? (**41**)
- நீங்கள் போலீஸை அழைத்தால் என்ன சம்பவிக்கும்? (**46**)
- இந்த சிற்றேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் (**49**)
- குறிப்புகள் (**59**)

# வாசகருக்கு

இந்த சிற்றேடு குடும்ப வன்முறை மற்றும் துர்ப்பிரயோகம் குறித்த தகவல்களை கொண்டுள்ளது. உதவி பெறுவது எப்படி என்பது குறித்த ஆலேசனைகளும் இதில் உள்ளன.

எல்லா சமூகங்களையும் சேர்ந்த எல்லா வகையான குடும்பங்களிலும் குடும்ப வன்முறை நடக்கிறது. இது கனடியர்களுக்கும் கனடியர்கள் அல்லாதவருக்கும் நடக்கிறது. இளம் வயதினருக்கும் வயது முதிர்ந்தவருக்கும் இது நடக்கிறது. இது நெருக்கமான துணைவர்களுக்கு* இடையேயும் நடக்கிறது, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயும் நடக்கிறது. இது உங்களுக்கும் நடந்துகொண்டு இருக்கலாம்.

குடும்பம் ஒரு பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் வயது அல்லது பால்மை பாகுபாடின்றி ஒருவரை ஒருவர் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தவேண்டும். குடும்ப வன்முறை அல்லது துர்ப்பிரயோகம் ஏற்கதக்கதல்ல.

மறுப்பு: இந்த பிரசுரம் ஒரு சட்ட ஆவணமல்ல என்பதை தயவுசெய்து அறிந்துக்கொள்ளுங்கள். இதில் பொதுவான தகவல்களே உள்ளன. உங்கள் சூழ்நிலை குறித்து சட்ட ஆலோசனை பெற, நீங்கள் ஒரு சட்டவாளரோடு பேச விரும்பக்கூடும். குறிப்பு : நட்சத்திர* அடையாளமிட்ட வார்த்தைகள் இந்த புத்தகத்தின் பின்னால் “இந்த சிற்றேட்டில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள்” என்ற தலைப்பின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

நீங்கள் கனடாவிற்கு புதியவரானால் சட்டங்கள் யாவை, உங்கள் உரிமைகள் யாவை அல்லது எங்கிருந்து உதவி பெறலாம் என்பது குறித்தெல்லாம் உங்களுக்கு உறுதியாக தெரியாமல் இருக்கலாம். கனடாவிற்கு நீங்கள் புதியவரானால் கலாச்சார அதிர்ச்சி* போன்ற சில சாதாரணமாக ஏற்படுகிற சவால்களை சந்தித்துக்கொண்டிருக்கலாம். உங்கள் குடும்பத்தையும் நண்பர்களையும் பிரிந்த ஏக்கம் உங்களுக்கிருக்கலாம். நீங்கள் தனிமையாக இருப்பதாக உணரலாம். உங்களை சுற்றி பேசப்படும் மொழி உங்களுக்கு புரியாததாக

இருக்கலாம். இவை எல்லாமும் சேர்ந்து உதவி பெறுவதை அல்லது நம்பிக்கையான ஒருவரை கண்டுபிடிப்பதை இன்னும் அதிக கடினமாக்கிவிடலாம்.

இந்த சிற்றேடு கனடாவிற்கு புதியவரான, ஒரு உறவுமுறையிலோ அல்லது ஒரு குடும்பத்திலோ துர்ப்பிரயோகத்திற்குள்ளாகி வாழக்கூடிய யாருக்குமானது. துர்ப்பிரயோகத்திற்குள்ளாகி வாழுகிற ஒரு நபரை உங்களுக்கு தெரிந்திருந்தாலும் இந்த சிற்றேடு உங்களுக்கு உதவலாம். இந்த சிற்றேடில் உள்ள தகவல்களை நீங்கள் அந்த நபருடன் பகிர்ந்துகொள்ளலாம்.

துர்ப்பிரயோகத்திற்குள்ளாகி இருப்பீர்களானால், நீங்கள் உதவி பெற வேண்டும். உங்களுக்கு உதவக்கூடியவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் அதை தனியாக எதிர்க்கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான தகுதியுடையவர். பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.



# துர்ப்பிரயோகம் என்றால் என்ன?

உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவர் அல்லது நீங்கள் நெருங்கி பழகும் ஒருவர் உங்களை உடல்ரீதியாகவோ, பாலுறவு ரீதியாகவோ, மனரீதியாகவோ பணரீதியாகவோ துன்புறுத்தும் போது ஏற்படுவதுதான் குடும்ப வன்முறை அல்லது துர்ப்பிரயோகம். குடும்ப வன்முறை அல்லது துர்ப்பிரயோகத்தில் உதாசீனமும் உட்படலாம்.

உடல்ரீதியான அல்லது பாலியல் ரீதியான வன்முறை போன்ற சில வகையான துர்ப்பிரயோகங்கள் குற்றமாகும். குற்றங்கள் குற்ற செயல்கள்* எனவும் அழைக்கப்படுகின்றன. தொடர்ச்சியான அவமதிப்புகள் போன்ற பிற துர்ப்பிரயோகங்கள், குற்றங்களின் கீழ் வராவிட்டாலும் துர்ப்பிரயோகம் துன்புறுத்துவதாக இருக்கலாம். இவை மோசமானால் துர்ப்பிரயோகத்தின் குற்ற வடிவங்களுக்கும் இது இட்டு செல்லலாம்.

அவசர உதவிக்கு
**9-1-1**
ஐ அழைக்கவும்
உள்ளே உங்களுக்கு பாதுகாப்பு இல்லாவிட்டால் ஜனங்கள் உங்களை பார்க்கும் படி வெளியில் ஓடுங்கள். கூச்சலிடுங்கள் – உங்கள் அக்கம்பக்கத்தவர்கள் கேட்டு போலீஸை அழைப்பதற்கு ஏதுவாக அப்படிச்செய்யுங்கள்.

உங்கள் கணவர், மனைவி, கூடிவாழும் துணைவர், ஆண் நண்பர்(காதலன்) அல்லது பெண் தோழி(காதலி) துர்ப்பிரயோகம் செய்தால் அது குடும்ப வன்முறை. உங்கள் பெற்றோர், பிள்ளை, சகோதரன், சகோதரி, சம்மந்திகள் (மாமனார், மாமியார், மைந்துனர், மைந்துனி) அல்லது கூட்டுக் குடும்ப நபர்கள் துர்ப்பிரயோகம் செய்தால், அதுவும் குடும்ப வன்முறை தான்.

துர்ப்பிரயோகம் எல்லா வம்சாவழியினர், மதத்தினர் மற்றும் வயதினர் ஆகிய எல்லாருக்கும் நேரிடலாம். எவ்வளவு படித்திருந்தாலும் சரி எவ்வளவு பணமிருந்தாலும் சரி அது யாருக்கு வேண்டுமானாலும் நேரிடலாம். இது ஆண்கள் அல்லது பெண்கள், சிறுவர்கள் அல்லது

சிறுமிகள் யாருக்கு வேண்டுமானாலும் நேரிடலாம். ஆனால், உடல்ரீதியான மற்றும் பாலியல் வன்முறை போன்ற மிகக் கடும் வகையான குடும்ப வன்முறைக்கு பெரும்பாலும் பெண்கள் ஆளாகின்றனர்.

நீங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகியிருந்தால், நீங்கள் பயப்படவும், கேவலப்படவும், தனிமைப்படவும் கூடும். அது உங்கள் தவறு என்று கூட நீங்கள் நினைக்கலாம். அது உங்கள் தவறல்ல. உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் தான் அவருடைய

செயல்களுக்கு பொறுப்பானவர்.

வன்முறை ஒரு விருப்பத்தேர்வு தான், ஆனால் அது ஒரு மோசமான விருப்பத்தேர்வு.

பால்மை சமநிலை

கனடாவில் ஆண் ஆனாலும் பெண் ஆனாலும் சட்டத்தின் கீழ் சமமானவரே. உதாரணமாக, பணியிடத்தில் அவர்களுக்கு சமமான மதிப்பு வழங்கப்பட வேண்டும். மேலும், ஒரு ஆண் ஒரு பெண்ணை கட்டாயப்படுத்தி வீட்டில் இருக்கச்செய்வதும், வகுப்புகளுக்கு செல்லவிடாமல் தடுப்பதும் அல்லது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை சந்திப்பதை தடுப்பதும் சட்டவிரோதமாகும்.

## நீங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளானீர்களானால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குடும்பத்தை குறித்து பிறரிடம் பேச நீங்கள் விரும்ப மாட்டீர்கள். குடும்ப வன்முறை தனிப்பட்ட விஷயமென என நீங்கள் நினைக்கலாம். ஆனால் இங்கே கனடாவில் அது பொது கரிசனைக்குரிய ஒரு விஷயமாகும். அது குடும்பங்களையும் குழந்தைகளையும் சமூகம் முழுவதையும் பாதிக்கும். குடும்ப வன்முறையோடு வாழுதல் குழந்தைகளுக்கு மிகவும் கெடுதலாகும்.

துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகியிருப்பீர்களானால், நீங்கள் உதவி பெறுவது முக்கியம். ஒரு மருத்துவர், தாதியாளர், சமூக பணியாளர், ஆசிரியர், போலீஸ் அலுவலர் அல்லது நீங்கள் நம்பும் ஒரு நபர் யாரிடமாவது பேசுங்கள். உங்கள் குழந்தை துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகியிருந்தால் அல்லது நீங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகுவதை பார்த்திருந்தால் நீங்கள் கட்டாயம் போலீஸை அல்லது குழந்தை பாதுகாப்பு சேவையை* தொடர்புக்கொள்ள வேண்டும்.

துர்ப்பிரயோகத்திலிருந்து பிறருடைய உதவின்றி மீள்வது மிக கடினமானதாகும்.உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபரை நீங்கள் சார்ந்திருப்பதாக நீங்கள் உணரலாம். அந்த நபரை நீங்கள் இன்னமும் நேசிக்கலாம். அந்த நபருக்கு நீங்கள் தேவைப்படுவதாக நீங்கள் உணரலாம். குடும்பத்தின் நற்பெயருக்காக நீங்கள் தொடர்ந்து வீட்டில் இருக்க வேண்டும் என விரும்பும் குடும்ப உறுப்பினர்கள் இருக்கலாம். இந்த உறவில் நீடிப்பது உங்கள் கடமை என நீங்கள் நினைக்கலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் உங்களை மிரட்டி, அங்கே தங்கியிருப்பதை விட விட்டுச்செல்வது மிக ஆபத்தானது என உணரச்செய்யலாம். அல்லது மாறி விடுவதாக சத்தியம் செய்து உங்களை தொடர்ந்து தங்கியிருக்க கெஞ்சிக்கேட்கலாம்.

## உறவுகளில் துர்ப்பிரயோகம் சாதாரணமானதா?

ஆரோக்கியமான உறவுகளில் துர்ப்பிரயோகம் இல்லை. குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் மதிக்கவும் ஒருவரை ஒருவர் கண்ணியத்துடன் நடத்தவும் வேண்டும். உங்களை துர்ப்பிரயோகப்படுத்தும் நபர் அதிகபடியான மன அழுத்தத்துடன் போராடிக்கொண்டிருக்கலாம், ஆனால் அதனால் அவர் உங்களை துன்புறுத்துவதை நியாயப்படுத்த முடியாது. பிரச்சனைகள் மற்றும் போராட்டங்களை கையாள பல ஆரோக்கியமான வழிகள் உள்ளன. உதாரணமாக, ஒரு மதத்தலைவர் அல்லது ஒரு சமூக சேவகர் போன்ற உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவரிடமிருந்து உதவி பெறலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் உங்களை நேசிப்பவராக இருக்கலாம், நீங்களும் அவரை நேசிக்கலாம். ஆனால் குடும்பம் அல்லது நெருங்கிய துணைவர் உறவில் வன்முறைக்கு இடமே இல்லை.

துர்ப்பிரயோகம் செய்யும் நபரும் பல வகையான துர்ப்பிரயோகங்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின்,* கீழ் குற்றம் என்பதை அறிய வேண்டும். மேலும் அவற்றிற்கு போலீஸ் வழக்கு பதிவுசெய்ய முடியும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

பின்வரும் பகுதியில் பல்வேறு வகையான துர்ப்பிரயோகங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

# உடல்சார் துர்ப்பிரயோகம்




"நீங்கள் உதவி பெற வேண்டும்.
இது இன்னும் மோசமாக தான்
போகிறது,"

மருத்துவமனை அவசர சிகிச்சை அறையில் சமூக சேவகருடனும் மொழி பெயர்ப்பாளருடனும் லேனா அமைதியாக அமர்ந்திருந்தாள். தனது அச்ச உணர்வை அவள் நிறுத்த முயற்சித்தாள். அவளுடைய முறிந்த கை நொண்டியாக தொங்கிக்கொண்டிருந்தது. "நீ இதை குறித்து புகார் தெரிவிக்க வேண்டும், தெரியுமா," என்று சமூக சேவகர் சொன்னார். லேனா சட்டென கலவரமடைந்தாள். "வேண்டாம். போலீஸ் வேண்டாம் !" அவள் வலியுறுத்தி சொன்னாள். "வேறு ஏதாவது வழியிருந்தால் சொல்லுங்கள்." அவள் உடல் நடுங்க ஆரம்பித்தது. போலீஸ் என்ற வார்த்தையை கேட்டவுடன் அவளுக்கு, தன்னுடைய சொந்த ஊரில் இராணுவத்தினர் வந்த நடுங்க வைக்கும் நினைவுகள் வந்தன- மரணம், இழப்பு, கொடூரமான கற்பழிப்புகள் மற்றும் கொடுமைகள் ஆகியவற்றின் ஞாபகங்கள் அலைமோதின. லேனாவும் அவளுடைய கணவர் ஜார்ஜும் இந்த துயரான நினைவுகளை மறக்கும் நம்பிக்கையுடன் தான் கனடா வந்திருந்தனர். ஆனால் அதற்கு பதிலாக அந்த இருளான காலத்தின் எதிரொலிகள் இன்னும் அவர்களை சுற்றிவந்துக்கொண்டிருந்தன. புதிய வாழ்க்கையை தொடங்கும் அவர்களது முயற்சிக்கு அவை தடையாக இருந்தன. அதிலும் உற்சாகமற்ற மனநிலையில் இருந்த ஜார்ஜுக்கு பிறரோடு ஒத்து போவது கடினமாக இருந்தது.அவனது மனநிலையின் ஏற்ற இறக்கங்கள் அவனை ஒரு வேலையில் நிலைத்திருக்கமுடியாமல் செய்தது. அவளிடம் மோசமாக நடந்துக்கொள்வதை நிறுத்தும்படி லேனா கூறினால் அவனது விரக்தி பெரும்பாலும் அவனை கடுங்கோபத்திற்கு ஆளாக்கும். சில சமயம் அவன் அவளை அடிக்கவும் ஆரம்பித்தான். பக்கத்துவீட்டுக்காரர் அவளது காயங்களை பார்த்து அவளை அங்கிருந்து போய்விடும் படி சொன்னதுண்டு. "ஜார்ஜ் கடினமான கட்டத்தை கடந்து வந்துக்கொண்டிருக்கிறார்," லேனா பதிலளித்தாள். ஆனால் இந்த முறை, லேனாவின் முறிந்த உடைந்த கையை பார்த்த பக்கத்துவீட்டுக்காரர் அவள் கட்டாயம் மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென கூறினார். "நீங்கள் உதவி பெற வேண்டும். இது இன்னும் மோசமாக தான் போகிறது," இப்படி சொல்லிவிட்டு ஒரு டாக்சியை அழைத்தாள். மருத்துவமனை அறையில் இதை நினைவுகூர்ந்த லேனா மெதுவாக சமூக சேவகர் பக்கமாக திரும்பி அவரிடம், "நானும் எனது கணவரும் இதனால் அதிக கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளோம். அவர் இப்படி நடந்துக்கொள்வதை நிறுத்த ஏதாவது வழியுள்ளதா?" லேனாவின் தோள் மீது கை வைத்து சமூக பணியாளர் மொழிப்பெயர்ப்பாளர் வாயிலாக சொன்னார். "உங்களை புரிந்துக்கொண்டு உங்களுக்கு உதவக்கூடிய ஒருவரை எங்களால் கண்டுபிடிக்க முடியும்."

## அது எப்படி இருக்கும்?

தாக்குதல்,* உள்ளிட்ட உடல்சார் துர்ப்பிரயோகம், என்பது ஒரு நபரின் சம்மதம்* இல்லாமல் வேண்டுமென்றே அவர் மீது பலத்தை பிரயோகிப்பதாகும். அது அதிக நாட்களுக்கு இருக்கும் உடல் வலி அல்லது காயத்தை ஏற்படுத்தலாம். உடல்சார் துர்ப்பிரயோகம் பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- தள்ளிவிடுதல் அல்லது முரட்டுத்தனமாக தள்ளுதல்
- அடித்தல், கன்னத்தில் அறைதல் அல்லது மிதித்தல்
- கிள்ளுதல் அல்லது குத்துதல்
- கழுத்தை நெரித்தல் அல்லது மூச்சடைத்தல்
- கத்தியால் குத்துதல் அல்லது அறுத்தல்
- சுடுதல்
- யார் மீதாவது பொருட்களை எறிதல்
- எரித்தல்
- ஒருவர் தாக்க வசதியாக ஒருவரை பிடித்து வைத்தல்
- அறையில் ஒருவரை பூட்டி வைத்தல் அல்லது கட்டிவைத்தல், அல்லது
- ஒருவரை கொல்லுதல்.

இந்த செயல்பாடுகள் எல்லாம் கனடாவில் குற்றங்களாகும்.

உடல்சார் வன்முறை என்பது போலீஸாரால் மிக கடுமையாக பார்க்கப்படுகிறது. துர்ப்பிரயோகம் செய்பவர் உங்களுக்கு எதிராக உடல்சார் வன்முறையை பயன்படுத்தியதிற்காக குற்றவாளியாக தீர்க்கப்பட்டால் தண்டனை மிகக்கடுமையாக இருக்கலாம். உடல்சார் வன்முறை குறித்து நீங்கள் எந்த நேரமும் போலீஸிடம் தெரிவிக்கலாம். வன்முறை நடந்து பல நாட்களுக்கு பிறகும் புகார் அளிக்கலாம். ஆனால் எவ்வளவு சீக்கிரம் தெரியப்படுத்துகிறீர்களோ உங்களுக்கு அவ்வளவு நல்லது.

வீட்டில் குழந்தை உடல்சார் துர்ப்பிரயோகத்திற்கு ஆளானால் குழந்தை பாதுகாப்பு அதிகாரிகள் இடைப்பட்டு குழந்தையை அதன் பெற்றோர்களிடமிருந்து அகற்றிவிட முடியும்

## கௌரவம் என்றழைக்கபடுவதன் அடிப்படையிலான வன்முறை

"கௌரவம்" என்றழைக்கபடுவதன் அடிப்படையிலான வன்முறை என்பது குடும்ப கௌரவத்தை பாதுகாப்பதற்காக குடும்ப உறுப்பினர்கள் வன்முறையை பயன்படுத்தும் போது நடப்பதாகும். பாதிக்கப்படுபவர் வழக்கமாக பெண்ணாக தான் இருப்பார். குடும்பத்திற்கு அவமானம் அல்லது கேவலத்தை கொண்டு வந்து விடும் என குடும்பம் நம்பும் வழியில் பாதிக்கப்பட்டவர் நடந்திருப்பார். உதாரணமாக, குடும்பம் பின்வரும் காரியங்களை அங்கீகரிக்காது:

- பையன்களுடன் பழகுதல் அல்லது பேசுதல்
- திருமண உறவுக்கு உட்படாது பாலியல் உறவு கொள்ளுதல்
- பெற்றோர் தவறான ஆடைகள் என நம்பும் ஆடைகளை அணிதல், அல்லது
- ஒரு கட்டாய திருமணத்தை மறுத்தல்.

வன்முறையை பயன்படுத்துவது குடும்பத்தின் நன்மதிப்பை திரும்ப கொண்டு வருமென குடும்ப உறுப்பினர்கள் நம்புகின்றனர். குடும்பம் பயன்படுத்தும். வன்முறைகளின் வகைகள் பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- அடிகள்
- கட்டாயப்படுத்தி அடைத்துவைத்தல்
- மிரட்டல்கள்
- தற்கொலைக்கு தூண்டுதல், மற்றும்
- கொலை.

இந்த செயல்பாடுகள் குற்றங்களாகும்.

குடும்ப மரியாதையின் காரணமாக தங்கள் பாதுகாப்பு குறித்து பயந்து வாழும் யாரையாவது உங்களுக்கு தெரிந்திருந்தால் போலீஸை தொடர்பு கொள்ளுங்கள்.

# கட்டாய திருமணம்



"திடீரென என் கனவுகள் அல்லது என் குடும்பம் எதாவது ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது போல் இருந்தது. எனக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது."

நதாலீ முன் நோக்கி சாய்ந்து கைகளில் தலை சாய்த்துக்கொண்டாள். ஒரு மோசமான கனவு காண்பது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. “நீ நடுங்குகிறாய்,” அவளது நெருங்கிய தோழி கிறிஸ்டின் சொன்னாள், அமைதியாக. கிறிஸ்டின் தொலைபேசியை எடுத்ததிற்கு நன்றியுடையவளாக இருந்தாள் நதாலீ. கிறிஸ்டின் அவளை பூங்காவில் சந்திக்க சம்மதித்தாள். இப்போது நதாலீ எல்லாவற்றையும் அவளிடம் சொன்னாள்: எப்படி அவளது பெற்றோர் ஊரில் உள்ள ஒரு ஆளுடன் திருமணம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றும், அவள் தாய் இளம் வயதில் எப்படி திருமணத்திற்கு எந்த மறுப்பும் சொல்லாமல் ஒப்புக்கொண்டாரோ அப்படி தானும் ஒத்துக்கொள்ள வேண்டுமென அவர்கள் எதிர்ப்பார்கிறார்கள் என்றும் சொன்னாள். “அவர்களால் எப்படி இப்படி செய்யமுடிகிறது?” கிறிஸ்டின் கதறினாள். “உனக்கு அதிக மதிப்பெண்கள் உண்டல்லவா! இது 12-ஆம் வகுப்பு ஆயிற்றே! நீ பல்கலைகழகம் போக விரும்புவதை அவர்கள் அறிவார்களே!” நதாலீ தரையை வெறித்து பார்த்தாள். “ஆம். நான் அவர்களிடம் ஆயிரம் முறை சொல்லிவிட்டேன். எனக்கு திருமணம் ஆக வேண்டும் என்பதை மட்டுமே அவர்கள் பார்க்கிறார்கள். அவர்களுக்கு எனது விருப்பங்கள் பற்றி கவலையில்லை.”

இப்போது நடந்த விஷயத்தை நதாலீயால் நம்பவே முடியவில்லை. “எனது மாமா, பாட்டி, சகோதரி, சகோதரன் மற்றும் எனது பெற்றோரும் ஒரு விருந்திற்கு வந்திருந்தனர். அப்போது திடீரென என் தந்தை நாங்கள் ஊருக்கு செல்லப்போவதாகவும் அங்கே அவர்கள் எனக்காக பார்த்து வைத்திருக்கிற ஆளை நான் திருமணம் செய்யப்போவதாகவும் அறிவித்தார். நான் புகார் செய்த போது அது குடும்பத்திற்கு உண்மையாக இருப்பது குறித்ததானது, எனவே எனக்கு வேறு வழி இல்லை என்று என் மாமா சொல்லி விட்டார். என் அம்மா திரும்பிவிட்டார்கள் அவர்களால் என் கண்களில் கூட நேராக பார்க்க முடியவில்லை. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை! திடீரென என் கனவுகள் அல்லது என் குடும்பம் எதாவது ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது போல் இருந்தது. எனக்கு உண்மையிலேயே பயமாக இருக்கிறது.” திடீரென அவளது தோழியை பார்த்து பயந்த தொனியில், “நான் அவனை வெறுத்தால் என்ன? அவன் என்னை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தினால் என்ன? அவர்களுக்கு கவலையில்லையா?” கிறிஸ்டின் பெஞ்சிலிருந்து சட்டென எழும்பி நின்றால்.நதாலீயின் கையைப்பிடித்து “கவலைப்படாதே,” என்றாள். “நீ விரும்பினால் இன்னும் சில நாட்கள் எங்களோடு தங்கலாம். உன்னை பார்க்க வருவதற்கு முன் என் அம்மாவிடம் நான் பேசிவிட்டுதான் வந்தேன். ஆலோசனை பெற உன்னை சட்ட மையத்திற்கு அழைத்துக்கொண்டு போவதாக அம்மா சொன்னார்கள். ஒருவரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்யச்சொல்வது சட்டத்திற்கு விரோதமானது. உனக்கு உதவி அவசியம் மற்றும் நீ பாதுகாப்பாக இருக்க வேண்டும்.”

கட்டாய திருமணம் என்பது ஒரு நபரோ இருவருமோ திருமணத்திற்கு சம்மதிக்காத போது ஏற்படுகிறது. கட்டாய திருமணம் என்பதும் ஏற்பாட்டு திருமணம் என்பதும் ஒன்றல்ல. ஏற்பாட்டு திருமணங்களில் இரு நபர்களும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கிறார்கள். கட்டாய திருமணத்தில் ஒரு நபரோ இருவருமோ திருமணத்திற்கு சம்மதிப்பதில்லை.

குடும்ப உறுப்பினர்கள் சில நேரம் உடல்சார் வன்முறை, கடத்துதல், கட்டாயமாக்க அடைத்துவைத்தல் அல்லது உணர்வு துர்ப்பிரயோகம் ஆகியவற்றை செய்து ஒரு நபரை திருமணத்திற்கு கட்டாயப்படுத்துவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைக்கு அது நல்லது என நினைப்பதால் அவர்களே மிரட்டல்கள் அல்லது வன்முறையை பயன்படுத்தி தங்கள் பிள்ளைகளை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்க முற்படலாம். இதுவும் குற்றமே.

சிறுவர்களும் கட்டாய திருமணங்களுக்கு ஆளாகலாம். சில நேரங்களில் அவர்களது குடும்பங்கள் அவர்களது படிப்பை நிறுத்தி கட்டாய திருமணம் செய்து வைக்கிறார்கள்.

திருமணத்திற்காக கட்டாயப்படுத்தப்படும் யாரையாவது உங்களுக்கு தெரியுமானால், போலீஸை தொடர்பு கொள்ளவும். அவர்கள் விருப்பதிற்கு மாறாக திருமணம் செய்து கொடுப்பதற்காக யாரையாவது நாட்டை விட்டு வெளியே கொண்டு செல்வதாக நீங்கள் சந்தேகம் கொண்டாலும் நீங்கள் போலீஸை அழைக்கலாம்.

## பெண் பிறப்புறுப்பு சேதம்

மருத்துவ காரணங்கள் அல்லாத காரணங்களுக்காக பெண் பிறப்புறுப்பை முழுமையாகவோ ஒரு பகுதியோ அகற்றுவது அல்லது காயப்படுத்துவது தான் பெண் பிறப்புறுப்பு சேதப்படுத்துதலாகும். அதனால் யாதொரு ஆரோக்கிய நன்மையுமில்லை அதனால் வலி ஏற்படலாம் மற்றும் கடுமையான நெடுநாளைய ஆரோக்கிய பிரச்சனைகள் ஏற்படலாம். கனடாவில் குழந்தையின் பெண் பிறப்புறுப்பு சேதப்படுத்துதல் குற்றமாகும்.

பெண் பிள்ளையின் பிறப்புறுப்பை சேதப்படுத்த உதவும் எந்த நபரும் இந்த குற்றத்தின் கீழ் தண்டனைக்குள்ளாக முடியும். பெற்றோர், மருத்துவர்கள் அல்லது தாதியாளர்கள் ஆகியோரும் இதில் உட்படுவர். இந்த காரியத்தை ஒரு குழந்தைக்கு செய்யச்சொல்லும் நபரும் இந்த குற்றத்தை செய்பவரே. இதை செய்வதற்காக குழந்தையை கனடாவை விட்டு வெளி நாடுகளுக்கு கொண்டு செல்வதும் சட்ட விரோதமே.

பெண் பிறப்புறுப்பு சேதம் என்பது குழந்தை துர்ப்பிரயோகம் ஆகும். இதை குறித்து அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

பெண் பிறப்புறுப்பு சேதம் என்ற ஆபாயத்தை ஒரு குழந்தை எதிர்நோக்குவதாக நீங்கள் சந்தேகப்பட்டால், போலீஸை தொடர்பு கொள்ளவும்.

# பாலியல் துர்ப்பிரயோகம்



*"அவளுக்கு ஏற்பட்ட அவமான உணர்வு மிகவும் ஆழமானதால், அவளால் அவனை ஏறெடுத்துப் பார்க்கவே முடியவில்லை."*

வீட்டிற்கு செல்லும் பேருந்தில் பயணித்த மெர்ஸிடஸ் யோசனையில் ஆழ்ந்து போனாள். இந்த நாடு அவளுக்கு இன்னும் ஒரு புதிராகவே இருக்கிறது. அவள் இங்க வந்து ஆறு மாதம் ஆகியிருக்கிறது. இன்றைய மொழி வகுப்பில் நடந்த உரையாடல் அவளுக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. கார்லினோடு கூட இருப்பதற்காக இங்கே வந்தது குறித்து மிகுந்த உற்சாகத்தில் இருந்தாள் அவள். கார்ல் கனடாவில் சில வருடங்களாக இருந்து வருகிறான். அவன் அவனது குடும்பத்தை காண சொந்த ஊருக்கு வந்திருந்த போது தான் அவள் அவனை சந்தித்திருந்ததும் உற்சாக மிகுதியால் அவசர கதியில் திருமணம் செய்ததும். இருவரும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் எனவே இருவருக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. ஆனால் வளர்ந்தது வெவ்வேறு இடங்களில், அவன் கனடாவிற்கு திரும்பிய போது அவள் ஊரில் ஸ்பான்சர்ஷிப் காகிதங்களுக்காக காத்திருந்தாள். அவள் இங்கே வந்தவுடன் பழக்கமான காரியங்கள் எல்லாம் வெகு தூரத்தில் இருப்பது போல உணர்ந்தாள். தன்னுடைய வீட்டையும் குடும்பத்தையும் நினைத்து ஏங்கினாள். மொழி வகுப்பை துவங்கும் வரையில் பிறருடன் பழகுவது அவளுக்கு சிரமமாக இருந்தது. இந்த தனிமை அவளை கார்லிடமிருந்த இன்னும் விலக்கி வைத்தது. கண்ணீர் கோபத்திற்கு வழிவகுத்தது. பெரும்பாலான நேரம் அவன் அவளை தொடுவதை அவள் விரும்பவில்லை. முதலில் அவன் பொறுமையாக இருந்தான். ஆனால் சில மாதங்களுக்கு பின் அவனுக்கும் கோபம் வந்தது. ஒரு இரவு, அவன் அவளை கட்டாயப்படுத்திய போதும் அவள் முடியாது என்று சொன்னாள். பின்னர், அவள் அழுகையும் வலியுமாக சுருண்டிருந்தாலும் அவன் கண்டு கொள்ளவில்லை. சில இரவுகளுக்கு பின்னர் அவன் அவளை திரும்பவும் தொட துவங்கிய போது, நிறுத்தும் படி அவள் அவனிடம் கெஞ்சினாள். போன முறை அது அவளை மிகவும் ஊறுபடுத்தியது என்பதை புரிந்துக்கொள்ளும் படி கெஞ்சினாள். அவன் அதை கண்டுகொண்டது போலவே இல்லை. அவன் திரும்பவும் அவளை வல்லுறவுக்கு உட்படுத்தினான். அதன் பிறகு அவர்கள் பேசிக்கொள்வதே அபூர்வமாகிவிட்டது. அவளுக்கு ஏற்பட்ட அவமான உணர்வு மிகவும் ஆழமானதால், அவளால் அவனை ஏறெடுத்துப் பார்க்கவே முடியவில்லை. ஆனால், இன்று அவளது வகுப்பில் திருமணத்தில் கூட கட்டாய பாலியல் உறவுகள் குற்றமாக கருதப்படுகின்றன என்பதை அறிந்தாள். அதை பற்றி சிந்திப்பதே அவளது மார்பை இறுகச்செய்தது. அவள் என்ன செய்ய வேண்டும்? அது திரும்பவும் நடக்கும் என்ற எண்ணமே அவளுக்கு பயத்தை தந்தது. ஆனால் அவனை எதிர்க்கொள்வதை நினைத்தால் அவளுக்கு நடுக்கமாக இருந்தது. அவளுடைய உரிமைகள் குறித்து அறிய யாரிடமாவது கேட்டு அறிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். அவள் ஆசிரியரிடம் கேட்டு எங்கே உதவி பெறுவதென அறிந்துகொள்ளலாம்.

## அது எப்படி இருக்கும்?

ஒரு வயதுவந்தவரின் பாலியல் துர்ப்பிரயோகம் பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- பாலியல் தொடுதல் அல்லது அனுமதி இல்லாத பாலியல் செயல்பாடு
- நிறுத்த கேட்டுக்கொண்ட பின்னும் தொடர்ச்சியான பாலியல் தொடர்பு, அல்லது
- பாதுகாப்பற்ற அல்லது இழிவுபடுத்தும் பாலியல் செயல்களை செய்ய யாரையாவது கட்டாயப்படுத்துதல்.

யாருடனாவது அவர்களது சம்மதமில்லாமல் மேற்கொள்ளப்படும் எல்லா பாலியல் தொடர்பும் பாலியல் தாக்குதல்* என்று அழைக்கப்படும் குற்றம் தான். பாலியல் தொடுதல், துணைவர் அல்லது, கூடிவாழும் துணைவர் அல்லது காதல் துணைவர் மீதான கட்டாய பாலியல் செயல்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது. உங்களுக்கு திருமணமாகியிருந்தாலும் கூட உங்கள் துணைவர் பாலியல் தொடர்பு கொள்ள உங்களை கட்டாயப்படுத்த முடியாது.

பாலியல் துர்ப்பிரயோகம் மற்றும் குழந்தையை பயன்படுத்தும் பாலியல் செயல்பாடுகளிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கு சிறப்பு சட்டங்களும் உள்ளன. குழந்தை பாலியல் துர்ப்பிரயோகம் என்பது ஒரு நபர் பாலியல் நோக்கங்களுக்காக ஒரு குழந்தையை தவறாக பயன்படுத்தும் போது நடப்பதாகும். குழந்தையுடனான உடல்சார் தொடர்பை மட்டுமே இது குறிப்பதல்ல. உதாரணமாக, வயதுவந்த ஒருவர் பின்வரும்படி செய்யும் போதும் நடக்கலாம்:

- குழந்தையிடம் பாலியல் கருத்துகளை சொல்லுதல், அல்லது
- ஒரு குழந்தையை பாலியல் நோக்கங்களுக்காக இரகசியமாக பார்த்தல் அல்லது படமெடுத்தல்.

குழந்தை பாலியல் துர்ப்பிரயோகம் பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- ஒரு பெரியவர் மற்றும் 16 வயதிற்கு குறைவான ஒரு பிள்ளைக்கு இடையேயான பாலியல் தொடர்பு
- 16 வயது முதல் 18 வயது வரையிலான பிள்ளையுடன் அதன் சம்மதம் இல்லாமல் மேற்கொள்ளப்படும் பாலியல் தொடர்பு, அல்லது
- 18 வயதிற்கு குறைவான பிள்ளையை பயன்படுத்தும் பாலியல் தொடர்பு.

ஒரு பெரியவருக்கும் 16 வயதிற்கு குறைவான ஒரு பிள்ளைக்கும் இடையேயான பாலியல் தொடர்பு குற்றமாகும். கனடாவில், பாலியல் செயல்பாட்டிற்கு சம்மதம் அளிக்கும் வயது 16 ஆகும். ஆனால் பிள்ளையின் வயதோடு நெருங்கிய வயதுடைய நபர் விஷயத்தில் சில விதிவிலக்குகள் உண்டு.

மேலும், 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்களை பயன்படுத்தும் பாலியல் செயல்பாட்டிற்கு சட்டப்படி சம்மதம் கொடுக்க முடியாது. விபசாரம், ஆபாசப்படம் உள்ளிட்டவைகள் குழந்தையை பயன்படுத்தும் பாலியல் செயல்பாடுகளாகும். அதிகாரத்தில் இருப்பவர்கள் அல்லது நம்பிக்கைக்குரியவர்கள் அல்லது குழந்தை சார்ந்திருந்திருக்கும் ஒருவர் குழந்தையுடன் பாலியல் செயல்பாட்டில் ஈடுபடும் சூழ்நிலைகளும் இவற்றில் உட்படும். அதிகாரத்தில் உள்ளவர் அல்லது நம்பிக்கைக்குரிய நபர் பெற்றோர், மாற்றாந்தாய் அல்லது தந்தை, பாட்டி தாத்தா, மூத்த சகோதரர் அல்லது சகோதரி, ஆசிரியர் அல்லது பயிற்றுநர்.

வீட்டில் குழந்தை பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு ஆளானால், குழந்தை பாதுகாப்பு சேவைகள் இடைப்பட்டு குழந்தையை அதன் பெற்றோரிடமிருந்து அகற்றிவிடக்கூடும்.

# உணர்வு துர்ப்பிரயோகம்



"இது இப்படியே தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு உதவக்கூடிய யாரையாவது."

ஹார்வே தன்னுடைய இளைய மகளை வாரி அணைத்துக்கொண்டார், அவளை தூக்கிக்கொண்டு நடந்தார். நூலகம் வெதுவெதுப்பாக இருக்கும், அவளுடைய கண்ணீரை துடைக்க ஒரு அமைதியான இடத்தை அவரால் கண்டுபிடிக்க முடியும். அவர்கள் சேர்ந்து புத்தகங்களை பார்ப்பார்கள். பின்னர் அங்கே உள்ள கணிணியை பயன் படுத்தி இதை விட நல்ல வேலை கிடைக்குமா என தேட ஆரம்பிப்பார். இன்றைக்கு நடந்தது சகிக்க முடியாமல் இருந்தது. பல இரவுகளும் இப்படி தான் வேலை முடிந்து வீட்டிற்கு வரும் போது அவரது மனைவி முடிவில்லா புகார்களுடன் தேள் போல் கொட்டுவாள். குழந்தைகள் முன்பு கட்டுப்பாட்டை இழக்காமல் இருப்பதற்காக அவர் கண்டுக்கொள்ளாதது போல இருப்பார். அடிக்கடி அவருக்கு வயிற்று வலி ஏற்படுவதில் ஆச்சரியமில்லை! சொந்த ஊரில் அவரும் மரியாவும் சேர்ந்து பல கனவுகளை கண்டிருந்தனர். தங்கள் மகள்களுக்கு நல்ல கல்வி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவை கிடைக்கக்கூடிய கனடாவில் தங்களுடைய குடும்பத்திற்கு புதிய வாழ்க்கை அமைக்க விரும்பினார்கள். ஆனால் இப்போது அவர்கள் கனடாவிற்கு வந்தப்பின்னர் அவர் செய்யும் எல்லாமும் மரியாவிற்கு ஏமாற்றமாக இருந்தது. குழந்தைகள் முன்பு அவரை கண்டிக்க அவள் தயங்கியதில்லை. ஒவ்வோர் இரவும், அவருடைய சொந்த வீட்டில் உதவியின்றித் தவிக்கும் உணர்வே ஹார்வேயுக்கு ஏற்பட்டது. குழந்தைகள் முன்பு தன்னிடத்தில் கூச்சலிடுவதை நிறுத்தும் படி கேட்டுக்கொண்டாலும் ஒரு பயனுமில்லை.இன்று இரவு உணவின் போது, மளிகை சாமான்களுக்காக அவர்கள் எவ்வளவு பணம் ஒதுக்கினார்கள் என்பது குறித்து குறை கூற ஆரம்பித்தாள். அவள் அவரை ஏசத்துவங்கினாள் “நீ ஒரு முட்டாள், சோம்பேறி. உனக்கு ஒரு நல்ல வேலையில்லை சம்பாத்தியமில்லை, அது குறித்து உனக்கு கவலையும் இல்லை. உன்னால் ஒரு பிரயோஜனமும் இல்லை. உன்னால் ஒன்றும் ஆக முடியாது. நீ ஒரு ஆண் அல்ல. என் தந்தை உன்னை விட எங்களை நன்றாக கவனித்துக்கொண்டார். நான் குழந்தைகளை அழைத்துக்கொண்டு திரும்பி போகப்போகிறேன்.” சாப்பாடு இருந்த தட்டை அவரை நோக்கி வீசிவிட்டு தன்னுடைய படுக்கை அறைக்குள் சென்று வேகமாக கதவடைத்துக்கொண்டாள். பெண் பிள்ளைகள் அழத்துவங்கியவுடன் அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்து விடுவார்.நூலகத்திற்கு சென்றதும் அங்கே துர்ப்பிரயோகம் குறித்து கடந்த வாரம் அவர் கவனித்த ஒரு கைப்பிரதியை அவர் எடுத்து வாசிக்கக்கூடும். இப்போது தன்னுடைய சூழ்நிலை இதுதான் என்று அவர் உணர்ந்தார். இது இப்படியே தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு உதவக்கூடிய யாரையாவது –இந்த நாட்டிற்கு வரும் மக்களுக்கு இருக்கும் அழுத்தங்களை புரிந்துக்கொண்டு உதவக்கூடிய யாரையாவது கண்டுபிடித்து உதவிபெற வேண்டும் என உணர்ந்தார்.

## அது எப்படி இருக்கும்?

ஒரு நபர் உங்கள் சுய மதிப்பை குலைக்கும் வகையில் அல்லது தனிமைப்படுத்தும் அல்லது பயமுறுத்தும் வகையிலும் கட்டுப்படுத்தும் வகையிலும் வார்த்தைகள் அல்லது செயல்களை பயன்படுத்தும் போது நடப்பது தான் உணர்வு துர்ப்பிரயோகம். உணர்வு துர்ப்பிரயோகம் சில வேளைகளில் மன ரீதியான துர்ப்பிரயோகம் என்று அழைக்கப்படுகிறது. அது பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- உங்களை மட்டம் தட்டுதல், பட்ட பெயர்களால் அழைத்தல் அல்லது அவமானப்படுத்துவது
- எப்போதும் உங்களை பார்த்து சத்தமிடுதல்
- நண்பர்கள் அல்லது குடும்பத்தை பார்ப்பதிலிருந்து தடுத்தல்
- உங்கள் நம்பிக்கை அல்லது மதம் குறித்து கேலி செய்தல், அதை பின் பற்ற விடாமல் செய்வது (ஆன்மீக துர்ப்பிரயோகம்)
- நீங்கள் எதை உடுத்த வேண்டும், எங்கே போக வேண்டும் யாரை பார்க்க வேண்டும் என கட்டுப்பாடு விதித்தல் (நீங்கள் வயது வந்தவராக இருக்கும்பட்சத்தில்)
- வேலை செய்யவோ வகுப்புகளில் சேரவோ வெளியே செல்லவோ விடாது தடுத்தல் (நீங்கள் வயது வந்தவராக இருக்கும்பட்சத்தில்)
- நீங்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் நடந்துக்கொள்ளவில்லை எனில் உங்களை நாடுகடத்துவிப்பதாக மிரட்டுதல்
- உங்களுக்கோ பிற நபருக்கோ கெடுதல் செய்யப்போவதாக மிரட்டுதல்
- உங்கள் பொருட்களை சேதப்படுத்துதல், செல்லப்பிராணிகளை காயப்படுத்துதல் அல்லது அப்படி செய்யப்போவதாக மிரட்டுதல், அல்லது

உணர்வு துர்ப்பிரயோகம் கடுமையானது உள்ளான காயங்கள் ஆறுவதற்கு அதிக காலம் பிடிக்கும்.



- உங்களை கொடுமைப்படுத்துதல்: மிரட்டிவைத்தல் அல்லது அவமானப்படுத்துதல் (இணையத்தில் உட்பட).

உணர்வு துர்ப்பிரயோகம் சில வகையான குற்றங்களாகும்: தீய எண்ணத்துடன் பின் தொடர்தல், உங்களை காயப்படுத்த போவதாக மிரட்டுதல், தொலைபேசியில் தொல்லை கொடுத்தல், உங்களை வேண்டுமென்றே மிரட்டுதல் அல்லது தற்கொலை செய்துக்கொள்ளத் தூண்டுதல். வேறு பல வகையான உணர்வு துர்ப்பிரயோகங்கள் குற்றங்கள் அல்ல. இருப்பினும், அவை அதிகப்பட்ச சேதத்தை ஏற்படுத்தலாம், பின்னர் அவை குற்ற செயல்களுக்கு வழிவகுக்கலாம்.

வீட்டில் குழந்தை உணர்வு துர்ப்பிரயோகத்திற்கு ஆளானால், குழந்தை பாதுகாப்பு சேவைகள் இடைப்பட்டு குழந்தையை அதன் பெற்றோரிடமிருந்த அகற்றிவிடக்கூடும்.

## குற்றவியல் தொல்லை கொடுத்தல்

ஸ்டாக்கிங் என்றும் அழைக்கப்படும் குற்றவியல் தொல்லை கொடுத்தல் குற்றமாகும். உங்கள் பாதுகாப்பு அல்லது உங்கள் அன்பிற்குரிய ஒருவரின் பாதுகாப்பு குறித்து உங்களை பயத்திற்குள்ளாக்கும் திரும்பதிரும்ப செய்யப்படும் காரியம் தான் இது. இது பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- கவனித்தல் அல்லது பின்தொடர்ந்து வருதல்
- உங்கள் பாதுகாப்பிற்கு அச்சறுத்தல்களை ஏற்படுத்தும் மிரட்டல்களை விடுத்தல்
- உங்கள் குழந்தைகள், குடும்பம், செல்லப்பிராணிகள் அல்லது நண்பர்கள் ஆகியோருக்கு மிரட்டல்களை விடுத்து உங்களை பயமுறுத்துதல், அல்லது
- நிறுத்த சொன்னபப்பின்னரும் திரும்ப திரும்ப அழைத்தல் அல்லது பரிசுகளை அனுப்புதல்.

# நிதி துர்ப்பிரயோகம்

## அது எப்படி இருக்கும்?

நிதி துர்ப்பிரயோகம் என்பது ஒருவர் பணம் அல்லது சொத்தை பயன்படுத்தி உங்களை கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் போது அல்லது சுயநலமாக பயன்படுத்தும் போது நடப்பதாகும். அது பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- உங்கள் பணம் அல்லது சொத்தை உங்கள் அனுமதியின்றி எடுத்தல்
- நீங்கள் பொருட்கள் வாங்க முடியாத படி உங்கள் பணத்தை தடுத்து வைத்தல்
- நீங்கள் விற்க விரும்பாத பொருட்களை விற்பதற்கான பத்திரங்களில் கையெழுத்திட செய்தல்
- உங்கள் உயிலை மாற்ற கட்டாயப்படுத்தல், அல்லது
- உங்கள் அடிப்படை தேவைகள் அல்லது உங்கள் குழந்தைகளின் தேவைகளை சந்திக்க குடும்ப பணத்தை எடுக்க அனுமதி மறுத்தல்.

திருட்டு மற்றும் மோசடி உள்ளிட்ட பெரும்பான்மையான வகையான நிதி துர்ப்பிரயோகங்கள் குற்றங்களாகும். சீதன மோசடி* போன்றவற்றில் ஒரு நபர் பிறருடைய நிதிநிலையை பயன்படுத்துவது உள்ளிட்ட சூழ்நிலைகளையும் கொண்டது தான் நிதி துர்ப்பிரயோகம்

# உதாசீனம்

குடும்ப உறுப்பினர், உங்களுக்கு கவனிப்பு* அளிக்க வேண்டிய கடமையை உடைய ஒருவர், உங்கள் அடிப்படை தேவைகளை அளிக்க தவறும் போது நடப்பது தான் உதாசீனம்.

இது பின்வருபவற்றை உள்ளடக்கியது:

- உங்களுக்கு ஒழுங்கான உணவு அல்லது வெதுவெதுப்பான உடை வழங்காதிருத்தல்
- வாழ்வதற்கு ஒரு பாதுகாப்பான மற்றும் வெதுவெதுப்பான இடம் அளிக்காதிருத்தல்
- போதிய ஆரோக்கிய கவனிப்பு, மருத்துவம் மற்றும் தனிநபர் சுகாதாரம் (தேவைப்பட்டால்) அளிக்க தவறுதல்
- உடல்சார் கெடுதலை தடுக்க தவறுதல், அல்லது
- சரியான மேற்பார்வையை (தேவைப்பட்டால்) நீங்கள் பெறுவதை உறுதிசெய்ய தவறுதல்.

நீங்கள் காயமடைந்திருந்தாலோ சுகவீனமாகயிருந்தாலோ உங்களை அதிக நேரம் தனிமையில் விடுவதும் இதில் அடங்கும்.

சிலநேரங்களில், உதாசீனமும் உடல்சார் துர்ப்பிரயோகம் போலவே துன்புறுத்தக்கூடும்.



கணவன்,மனைவி மற்றும் கூடிவாழும் துணைவர்கள் ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்ளும் கடமையுடையவர்கள். வயதுவந்தவர்கள் தங்களை சார்ந்திருக்கும் குழந்தைகள் மற்றும் பெற்றோரை கவனித்துக்கொள்ளும் கடமையுடைவர்கள்.

வாழ்க்கையின் தேவைகளை* அளிக்க தவறுதல் உள்ளிட்ட சில வகையான உதாசீனம் மற்றும் குழந்தை கைவிடல்* கனடாவில் குற்றம். ஒரு குழந்தை உதாசீனப்படுத்தப்பட்டால், குழந்தை பாதுகாப்பு அதிகாரிகள் இடைப்பட்டு குழந்தையை அதன் பெற்றோரிடமிருந்து அகற்றிவிடுவர்.

# நெருங்கிய துணைவர் வன்முறை

நெருங்கிய துணைவர் வன்முறை என்பது உங்களுக்கு ஏற்படக்கூடிய வன்முறை அல்லது துர்ப்பிரயோகமாகும் :

- திருமணம், கூடிவாழும் அல்லது நெருங்கி பழகும் உறவுமுறைக்குள்
- எதிர்பால் அல்லது அதே பால் உறவுமுறை, அல்லது
- உறவு முறியும் நேரம் அல்லது முடிந்த பின்னர் என ஒரு உறவில் எந்த நேரத்திலும்.

நெருங்கிய துணைவர் வன்முறை எல்லாம் ஒன்றல்ல. சில விஷயங்களில், ஒரு நபருக்கு அதிகாரமும் கட்டுபடுத்தும் உரிமையும் தேவைப்படலாம். அவர்கள் துணைவர் மீது முழு ஆதிக்கம் செலுத்த அவர் அதை ( உடல்சார் வன்முறை உள்ளிட்ட) பல்வேறு வழிகளில் பயன்படுத்தலாம். உதாரணமாக, பின் வரும் காரியங்களை அவர்கள் கட்டுப்படுத்த முயல்வர்:

- நீங்கள் என்ன உடுத்துகிறீர்கள்
- நீங்கள் வெளியே செல்வதா கூடாதா மற்றும் நீங்கள் எங்கே போகிறீர்கள்
- நீங்கள் யாருடன் நேரம் செலவழிக்கிறீர்கள்
- உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் எப்போது பேசலாம்
- நீங்கள் பணத்தை எதற்காக செலவழிக்கிறீர்கள்
- நீங்கள் வேலைக்கு அல்லது வகுப்புகளுக்கு செல்லலாமா கூடாதா,மற்றும்
- எப்போது மற்றும் எப்படி நீங்கள் இருவரும் பாலியல்ரீதியாக நெருக்கமாக இருக்கிறீர்கள்.

இந்த வகையான துர்ப்பிரயோகம் பெரும்பாலும் நாளாக நாளாக மோசமடைகிறது. அது கடுமையான உடல்சார் வன்முறைக்கு வழிவகுக்கிறது.அது ஊறுபாட்டை அடுத்த உளவழுத்தக் கோளாறு (PTSD)* போன்ற நீண்ட நாளைய ஆரோக்கிய பிரச்சனைகளுக்கு காரணமாகலாம்,

பிற விடயங்களில் இரு துணைவர்களுமே ஒருவரை ஒருவர் துர்ப்பிரயோகம் செய்யலாம். எல்லா உறவுகளிலும் பிரச்சனைகள் உண்டு ஆனால் அவற்றை தீர்க்க ஆரோக்கியமான வழிகள் உண்டு. சில நேரம் மக்கள் கடுமையான மன அழுத்தத்தில் வாழ்கிறார்கள். பிரச்சனையை சமாதானமாக தீர்க்காமல் வன்முறையை பயன்படுத்துகின்றனர். துர்ப்பிரயோகம் செய்வதை தடுப்பது கடினமானது ஆனால் முடியாததல்ல.

சிலருக்கு அவர்கள் பிறந்த நாட்டில் மிக மோசமான அனுபவங்கள் நேரிட்டிருக்கலாம் அல்லது அவர்கள் போர்ச்சூழலில் வாழ்ந்திருக்கலாம்.அப்படி பட்டவர்களுக்கும் PTSD இருக்கலாம். அது அவர்கள் உறவுகளை பாதிக்கலாம். ஆலோசனை வழங்குதல் அல்லது பிற சேவைகள் இந்த பிரச்சனைகளை தீர்க்க உதவலாம்.

துர்ப்பிரயோகம் எதற்காக நடக்கிறதாய் இருந்தாலும் உங்கள் உயிருக்கோ அல்லது உங்கள் குழந்தைகள் உயிருக்கோ ஆபத்திருப்பதாக நீங்கள் உணர்ந்தால் உடனே உதவியை நாடுங்கள்.

# முதியோர் துர்ப்பிரயோகம்



*"அவர்கள் தங்களுடைய வேலைகளை மட்டும் கவனிக்க வேண்டும் என அவளுடைய மகள் சொல்கிறாள்."*

மகள் தன்னை நோக்கி சத்தம் போடும் போது ஈஷா ஒன்றுமே சொல்லவில்லை. ஏன் அனிலா தன்னை இவ்விதமாக நடத்துகிறாள் என அவள் வியக்கிறாள். மகள் அவள் மீது வைத்திருந்த அன்பும் மதிப்பும் என்னவாயிற்று? ஈஷாவின் முதுகு வலித்தது; அவள் காலை உணவு பாத்திரங்களையும் முழு வீட்டையும் சுத்தம் செய்ய வேண்டும். இப்போது அவளது மகள் அனிலா குழந்தைகளுக்கு இரவு உணவை அவள் செய்யவேண்டும் என சொன்னாள். தன்னால் முடியாது எனச்சொல்ல விரும்புகிறாள்: அவள் செய்யும் பாரம்பரிய உணவுகளை அவர்கள் கிண்டல் செய்வதை பார்த்திருக்கிறாள். கனடாவிற்கு வருவது குறித்து முதலில் அவளுக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது. ஆனால் இப்போது சொந்த நாட்டில் அவர்களுக்கென ஒரு இடம் இருக்கவேண்டுமென விரும்புகிறாள். அவளது மருமகன் சந்தாவை, அவளது நாட்டுப்புற ரீதிகள் பொறுமை இழக்கச்செய்கிறது.அவளது மகளும் புயல் போல முன்னும் பின்னும் தாக்குகிறாள். சில நேரம் அவளது சொற்கள் மிக கொடூரமாக இருக்கும்.

ஈஷா எப்போதாவது தான் வெளியில் போவாள்; அவளது ஆங்கிலம் குறித்து அவளுக்கு உறுதியில்லை. திரும்பவும் இந்திய- கனேடிய மையத்திற்கு செல்ல விரும்புகிறாள். ஆனால் அனிலா அவளை அங்கு கூட்டிப்போக விரும்பவில்லை. அவள் வயதையொத்த பெண்களோடு அரட்டை அடிக்க அவள் அதிகம் விரும்பினாள். அவர்கள் தங்கள் குழந்தைகள் அவர்களிடம் கூடுதலாக எதிர்ப்பார்ப்பதாக சொன்னார்கள். அவர்கள் தங்களுடைய வேலைகளை மட்டும் கவனிக்க வேண்டும் என அவளுடைய மகள் சொல்கிறாள். மையத்தில் உள்ள சமூக பணியாளரிடம் பேசச்சென்றால் தன்னுடைய தோழி சக்கினாவை கூட வரச்சொல்ல வேண்டும் என ஈஷா எண்ணுகிறாள்.

## அது எப்படி இருக்கும்?

*முதியவர்களை (உதாரணமாக, அவர்களது பெற்றோர், தாத்தா பாட்டிகள்,வயதான மாமனார் மாமியார்) கவனித்துக்கொள்ளும் நபர்கள் சிலநேரங்களில் துர்ப்பிரயோகம் செய்கிறவர்களாக இருக்கலாம். துர்ப்பிரயோகம் எப்போதும் தவறு தான்.*

*நீங்கள் முதியவராக இருந்து, துர்ப்பிரயோகத்திற்குள்ளாகி இருப்பீர்களானால், நீங்கள் அந்த நபரை சார்ந்து இருக்கலாம். அந்த நபரை பாதுகாக்க வேண்டுமெனவும் நீங்கள் நினைக்கலாம். நீங்கள் நேசிக்கும் நபர் அல்லது நீங்கள் உங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிற நபர் உங்களை துன்புறுத்துவதால் நீங்கள் அவமானப்படலாம். நீங்கள் அந்த நபரை நேசிக்கலாம். ஆனால் அவர் உங்களை நடத்தும் விதத்தை நீங்கள் விரும்பவில்லை. உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் மனஅழுத்தத்திற்கு ஆளாகியிருக்கலாம், அவர் அந்த பிரச்சனைக்கான தீர்வை பெற உதவியை நாட வேண்டும் . அதை அவர்கள் உங்களிடம் காண்பிக்கக்கூடாது.*

*மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்பட தகுதியானவர். நீங்கள் துர்ப்பிரயோகத்திற்குள்ளாவதாக நினைத்தால், நீங்கள் உதவியை நாடவேண்டும். நீங்கள் நம்பும் ஒருவரை அழைத்து அவரிடம் என்ன நடக்கிறது என்பதை சொல்லலாம் . அல்லது, மருத்துவருடன் தனிமையில் இரகசியமாக பேச வேண்டுமென நீங்கள் கேட்கலாம், அவரிடம் என்ன நடக்கிறது என்பதை சொல்லலாம். இந்த வரிசையில் வேறொரு சிற்றேடான "முதியோர் துர்ப்பிரயோகம் தவறானது" என்ற சிற்றேடை வாசிக்க நீங்கள் விரும்பக்கூடும்.*

http://www.justice.gc.ca/eng/pi/fv-vf/pub/abus/eaw-mai/pdf/eaw-mai.pdf



# குழந்தை துர்ப்பிரயோகம்



*“அவள் ஏன் அவளது சகோதரனை தடுக்கவில்லை? அவனை கண்டு அவள் பயந்தாளா?”*

குழந்தை பாதுகாப்பு அலுவலகத்திற்கு அருகே சென்றதும் ரென்னீ வேகமாக நடக்கத்துவங்கினாள். அவளுக்கு வியர்த்து ஒழுகியது. அவள் இன்று காலை முதல் வேலையாக அவர்களை அழைத்து முன்னேற்பாடு செய்திருந்தாள். பீட்டர் நேற்றிரவு அவனது மகன் ஆடம்மை கடுமையாக அடித்ததிலிருந்து அவளுக்கு தூக்கமே இல்லை. ஆறு வயது பையன் தனது நண்பனின் கால்பந்தை திருடி வீட்டிற்கு கொண்டுவந்து விட்டான். “அவனுக்கு அது நல்ல பாடமாக இருக்கும்,” பீட்டர் சொன்னான். ரென்னீ இடைப்பட முயற்சித்தாள். ஆனால் பீட்டர் அவளை தள்ளிவிட்டு உன் வேலையை பார் என சொல்லிவிட்டாள். “நான் அவன் தந்தை: எனக்கு தெரியும் என்ன செய்வதென்று,”அவன் கத்தினான். கனடாவிற்கு வந்த சில மாதங்களாக தனது சகோதரன் மற்றும் அவனது குடும்பத்துடன் ரென்னீ இருந்தாள்,ஆனால் ஏற்கனவே அவள் பையனின் பாதுகாப்பு குறித்து கவலைக்கொண்டிருந்தாள்.. “நீ இப்படி செய்யக்கூடாது, பீட்டர். அது துர்ப்பிரயோகம். நீ பல வழிகளில் ஆடம்மை புண்படுத்துவாய் – அவனை வெறுமனே சிராய்ப்பதுடன் நிறுத்திக்கொள்ள மாட்டாய். அவன் உன்னையும் நம்பமாட்டான், வேறு யாரையும் நம்பமாட்டான்!” அவள் கதறினாள். இந்த வகையான ஒழுங்கு நடவடிக்கை இந்த நாட்டில் குற்றம் என்பது ரென்னீக்கு நிச்சயமாக தெரியும். குடும்பமும் நண்பர்களும் நிறைந்திருந்த வீட்டில் எல்லார் முன்பாகவும் அவளை பீட்டர் கேலி செய்தான். “உனக்கு உண்மையான குடும்பங்கள் குறித்து எதுவும் தெரியவில்லை. உனக்கு சொந்தமான குழந்தைகள் உனக்கில்லை.” ரென்னீ ஸ்தம்பித்து போய் பின்வாங்கினாள். அவளது சகோதரன் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது அவளது கண்களில் கண்ணீர் கட்டியது. ஆனால் இப்போது அவள் மனது வேகமாக யோசித்தது. அவள் ஏன் அவளது சகோதரனை தடுக்கவில்லை? அவனை கண்டு அவள் பயந்தாளா?அவளது அண்ணி ஏன் ஒன்றும் சொல்லவில்லை? போலீஸை அழைத்தால் அவளது குடும்பத்தை இழக்க நேரிடுமென அவள் கவலைப்பட்டாளா? ரென்னி வீட்டை விட்டு வெளியேறியமை அவளது உள்ளத்தை மிகவும் வலுப்படுத்தியது. அவளது மருமகனை பாதுகாக்க வேண்டுமென அவள் அறிந்திருந்தாள். இதை குறித்து புகார் அளித்து அவர்கள் எல்லாருக்கும் உதவியை அவள் பெறுவாள். அவளது குடும்பம் அவள் மீது கோபம் கொள்ளலாம்– அவர்களது விதிகளை பின்பற்றுவதென்றால் இது போன்ற பிரச்சனைகளை அமைதியாக வைப்பது தான். ஆனால் அவளால் கையாள முடியுமென அவளுக்கு தெரியும். அவளுக்கு ஆடம்மை பாதுகாப்பாக வைப்பதுதான் வேறு எதைவிடவும் மிக முக்கியமானது. அவனுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் இருக்க வேண்டுமென அவள் விரும்பினாள்.



## அது எப்படி இருக்கும்?

ஒற்றை பெற்றாராக (தந்தை மட்டும் அல்லது தாய் மட்டும்) இருப்பது சில சமயம் கடினமானது. உங்கள் குழந்தையின் நடத்தை மரியாதையற்றதாகவோ மோசமாகவோ இருப்பதாக நீங்கள் நினைத்தால் அதற்கு பதில் வன்முறையை கையாளுவதல்ல. அது நீங்கள் குழந்தையை துன்புறுத்துவதிலும் நீங்கள் குற்றவியல் தண்டனைக்கு ஆளாவதிலும் தான் முடியும். பல வகையான துர்ப்பிரயோகங்கள் குற்றங்களாகும்.

உங்கள் குழந்தையின் நடத்தையை புரிந்துக்கொள்ளவும் வழிநடத்தவும் அல்லது உங்கள் குழந்தை கடினமான சமயங்களை கடந்து போக உதவவும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் நம்பகமான நண்பர், மருத்துவர், சமூக சேவகர், பாடசாலை வழிகாட்டுதல் ஆலோசகர் அல்லது ஆசிரியர் போன்றோரிடம் அறிவுரை பெறவும். வன்முறையை பயன்படுத்துவதை எதுவும் நியாயப்படுத்தாது. குற்றவியல் சட்டத்தோடு மாகாண மற்றும் பிரதேச குழந்தை பாதுகாப்பு சட்டங்களும் குழந்தைகளை துர்ப்பிரயோகம் மற்றும் உதாசீனத்திலிருந்து பாதுகாக்கிறது.

கனடாவில், ஒரு குழந்தை துர்ப்பிரயோகம் செய்யப்படுவதாக ஒரு நபர் நினைத்தால் அதை குறித்து கட்டாயம் புகார் அளிக்க வேண்டும் என கூறும் சட்டம் ஒவ்வொரு மாகாணம் மற்றும் பிரதேசத்திலும் உண்டு. உதாரணமாக, உங்கள் குழந்தைகள் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டால் அல்லது குடும்ப வன்முறைக்கு ஆளானால், நீங்கள் அவர்களுக்காக உதவி பெற வேண்டும். நீங்கள் உதவி பெற அல்லது ஆலோசனை பெற குழந்தை பாதுகாப்பு அல்லது குடும்ப சேவைகள் முகமையை அணுகவும். உங்கள் குழந்தைகளை பாதுகாக்க நீங்கள் முயற்சி செய்யாவிட்டால், போலீஸ் அல்லது குழந்தை பாதுகாப்பு சேவைகள் ஈடுபடக்கூடும். துர்ப்பிரயோகம் அல்லது உதாசீனத்தின் வகை குற்றமாக கருதப்படாவிட்டாலும் இந்த சட்டங்கள்

குழந்தைகளை பாதுகாக்கின்றன. உங்கள் குழந்தைகளை பாதுகாக்க உங்களால் முடியாது என நீங்கள் நினைத்தால், போலீஸை அழைக்கவும்.

## குடும்ப வன்முறையை பார்க்கும் அல்லது கேட்கும் குழந்தைகள்

நீங்கள் ஒரு பெற்றாராக இருந்து துர்ப்பிரயோகம் செய்யப்பட்டால், அதன் காரணமாக உங்கள் குழந்தைகளை கவனிப்பது உங்களுக்கு கடினமாகக்கூடும். துர்ப்பிரயோகத்திற்கு ஆளாவதால்  உங்கள் குழந்தைகளை கவனிக்க உங்களுக்கு போதுமான சக்தியிருப்பதில்லை. அவர்கள் தேவைகளை சந்திக்க முடியாமல் போகும் போது நீங்கள் குற்ற உணர்விற்கு ஆளாவீர்கள்.

வன்முறையால் அவர்கள் உடல் பாதிப்படையா விட்டாலும் குழந்தைகள் குடும்ப வன்முறையை பார்ப்பதோ கேட்பதோ அவர்களுக்கு மிகக்கடினமானதாக இருக்கும். அவர்களுக்கு பயமும் பாதுகாப்பின்மையும் தோன்றக்கூடும். அவர்கள் பாடசாலைகள் அல்லது சமூக சூழ்நிலையில் சிறப்பாக செயல்பட முடியாது. அவர்களுக்கு சுய மரியாதை இல்லாமல் போகக்கூடும். அவர்கள் உங்களையும் மதிக்க மாட்டார்கள். பலவீனமானவர்கள் ஆகிவிடலாம் அல்லது பள்ளிக்கூடத்தில் பலவீனத்தால் பாதிக்கப்பட்டவர்களாகிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களை அமைக்கும் போது அவர்கள் துர்ப்பிரயோகம் செய்யபவர்களாகவோ துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகுபவர்களாகவோ வளரலாம்.

உங்கள் குழந்தைகள் குடும்ப வன்முறைக்கு ஆளானால், குழந்தை பாதுகாப்பு சேவைகள் உங்கள் பிரச்சனையில் ஈடுபட அதுவும் காரணமாகக் கூடும்.

உதவி கிடைக்கிறது. உங்கள் குழந்தைகளுக்காக மாற்றங்களை எப்போதும் கொண்டுவரலாம்.



துர்ப்பிரயோகம் குறித்து அதிக தகவல்கள் பெற பார்க்கவும் *குழந்தை துர்ப்பிரயோகம் தவறானது: நான் என்ன செய்ய முடியும்?* http://www.justice.gc.ca/eng/pi/fv-vf/pub/abus/caw-mei/index.html.

# தங்கியிருப்பது அல்லது விட்டு செல்வது

ஒரு உறவில் தொடர்வதா அல்லது விட்டுசெல்வதா என முடிவெடுப்பது உங்களுக்கு கடினமாக இருக்கலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்பவர் ஒரு நாள் திருந்திவிடுவார் என நீங்கள் நம்பலாம். விட்டு செல்வது சூழ்நிலையை மோசமாக்கிவிடுமென நீங்கள் நினைக்கலாம். நீங்கள் விட்டுசெல்வதாக இருந்தால் உங்கள் குழந்தைகளை உங்களிடமிருந்து பிரித்து விடுவார்கள் என்று நீங்கள் அச்சப்படலாம். பிறர் என்ன நினைப்பார்கள் என்றும் நீங்கள் கவலைப்படலாம் அல்லது உங்களுக்கே அது அவமானமாக இருக்கலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபரை நீங்கள் நேசிக்கலாம் அவரை பிரிய உங்களுக்கு விருப்பமில்லாதிருக்கலாம். துர்ப்பிரயோகம் செய்யும் நபரை தான் நீங்கள் பணத்தேவைகளுக்காக சார்ந்திருக்கலாம். எங்கிருந்து உதவி பெறுவது என உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

தங்கியிருப்பதாகவோ விட்டுச்செல்வதாகவோ நீங்கள் முடிவு செய்யும் போது நீங்கள் சரியான தேர்வை செய்ய உதவக்கூடிய நம்பகமான நபரை கண்டுபிடியுங்கள். முடிவெடுக்குமுன் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கியமான காரியங்கள் பின்வருமாறு:

- உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் உங்களையோ நீங்கள் நேசிக்கும் ஒருவரையோ கொன்றுவிடுவதாக மிரட்டியுள்ளாரா?
- அந்த நபர் உங்களுக்கு எதிராக பாலியல் வன்முறையை பயன்படுத்தியுள்ளாரா?
- அந்த நபர் தற்கொலை செய்ய முயற்சித்தாரா அல்லது தற்கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளரா?

- அந்த நபர் உங்களை மிகவும் கட்டுப்படுத்துபவராகவோ பொறாமையுள்ளவராகவோ இருக்கிறாரா?
- பிரிவு நேர சாத்தியம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளாதவராக இருக்கிறாரா?
- அந்த நபர் இதற்கு முன் உங்களை குற்றத் தொந்தரவுக்கு உட்படுத்தி உள்ளாரா?
- அந்த நபர் அதிகப்படியாக குடிக்கிறாரா அல்லது போதை மருந்து எடுத்துக்கொள்கிறாரா?
- அந்த நபர் ஏதாவது குற்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளாரா?
- உங்கள் குழந்தைகளுடன் அந்த நபர் வன்மையாக நடந்துக்கொண்டுள்ளாரா?
- அந்த நபர் உங்கள் குழந்தைகளை பாலியல் ரீதியாக துர்ப்பிரயோகம் செய்துள்ளாரா?
- உங்களையோ உங்கள் குழந்தைகளையோ காயப்படுத்த கத்தி போன்ற ஆயுதத்தை பயன்படுத்தியுள்ளாரா?
- பிற நபர்களுடன் அந்த நபர் வன்மையாக நடந்துக்கொண்டுள்ளாரா?
- வீட்டில் துப்பாக்கி உள்ளதா?
- உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து நீங்கள் பயப்படுகிறீர்களா?
- உங்கள் செல்லப்பிராணிகளின் பாதுகாப்பு குறித்து நீங்கள் பயப்படுகிறீர்களா?
- விட்டு செல்வதற்கு பயமாக இருக்கிறதா?
- உங்கள் நண்பர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்காக பயப்படுகிறார்களா?
- நீங்கள் சக்தியற்றவராக, மனச்சோர்வுடையவராக அல்லது மிகவும் பதட்டமாக காணப்படுகிறீர்களா?

இவற்றில் சில கேள்விகளுக்கு நீங்கள் ஆம் என்று பதிலளித்தால் நீங்கள் என்ன முடிவு செய்தாலும் உங்களுக்கு உதவியும் ஆதரவும் தேவை. உங்கள் பயங்கள் மற்றும் உங்கள் உணர்வுகளை கவனிப்பது முக்கியமாகும். நீங்கள் நம்பும் ஒருவரிடம் அந்த பயங்களை குறித்து பேசவும். உங்களுக்கு தெரிந்த யாருக்கும் நீங்கள் சொல்ல விரும்பவில்லை என்றால் போலீஸுக்கு

அல்லது உதவி இணைப்பை அழைக்கவும்.உங்களை குறைகூறாமல் உதவி செய்ய அவர்கள் இருக்கிறார்கள். அடைக்கல மையத்திற்கு செல்ல நீங்கள் முடிவு செய்தால் உங்கள் குழந்தைகளையும் கூட கொண்டுவரலாம். அடைக்கல மையத்தின் ஊழியர்கள் நீங்கள் அங்கே இருப்பதாக யாருக்கும் சொல்ல மாட்டார்கள். உங்களை பாதுகாக்கவும் நீங்கள் முடிவுகள் எடுக்கவும் அவர்கள் உதவக்கூடும்.

நீங்கள் தொடர்ந்து தங்கியிருப்பதென முடிவு செய்து துர்ப்பிரயோகம் நிற்கும் என எதிர்பார்த்தால்,உங்களை துன்புறுத்தும் நபர் தன்னுடைய செய்கைகளுக்கு தானே பொறுப்பேற்பார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அந்த நபர் தன்னுடைய நடத்தையை மாற்றிக்கொள்ள நிபுணரின் உதவியை பெற சம்மதிக்க வேண்டும். அந்த நபரின் வன்முறையான நடத்தைக்கு ஒரு காரணம் போதை மருந்தோ மதுபானமோ என்றால்,போதை பழக்கத்தை நிறுத்தவும் நல்ல முறையில் வாழவும் வன்முறையை நிறுத்தும் படிக்கும் உதவியை பெற வேண்டும். நடத்தையில் மாறுதல் வர அதிக நாட்கள் பிடிக்கும். உங்கள் இருவருக்கும் இந்த காலம் முழுவதிலும் உங்களுக்கு ஆதரவு வேண்டும். பாதுகாப்பாக தங்குவதற்கு ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும். பாதுகாப்பு திட்டத்தை உருவாக்கவும்.ஒரு சமூக சேவகர் அல்லது போலீஸ் அதிகாரி உங்களுக்கு இதில் உதவலாம்.இந்த நபர் மாறுவதற்கு முயன்றுக்கொண்டிருந்தாலும் வன்முறையை பயன்படுத்தக்கூடும். கைக்கெட்டும் படி அவசர உதவி எண்களின் பட்டியலை வைத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் தங்குவதாக முடிவு செய்தாலும் செல்வதாக முடிவு செய்தாலும் துர்ப்பிரயோகம் நடந்த வீட்டில் உங்கள் குழந்தைகள் தங்க நேர்ந்தால் துர்ப்பிரயோகம் குறித்து நீங்கள் கட்டாயம் குழந்தை பாதுகாப்பு சேவைகளுக்கு சொல்லவேண்டும்.

## நீங்கள் பிரிந்துசெல்ல தீர்மானத்தால் உங்கள் குழந்தைகளின் நிலை என்ன?

துர்ப்பிரயோகமான சூழ்நிலையில் நீங்கள் விட்டுசெல்ல தீர்மானித்தால் உங்கள் குழந்தைகளை வைத்திருக்கும் உரிமை பெற உங்களுக்கு இன்னும் தகுதியுண்டு. உங்கள் குழந்தைகளுக்கு ஆபத்து உண்டாகும் என நீங்கள் நினைத்தால், போலீஸை தொடர்புக்கொண்டு உங்களையும் உங்கள் குழந்தைகளையும்

ஒரு அடைக்கல மையத்திற்கோ அல்லது பாதுகாப்பாக நீங்கள் இருக்கும் வேறு ஒரு இடத்திற்கோ கொண்டு செல்லும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு பாதுகாப்பு கிடைத்தவுடன், ஒரு சட்டவாளருடன் தொடர்பு கொண்டு நீதிமன்றத்தில் விண்ணப்பித்து குழந்தைகளை வைத்திருக்க அல்லது வளர்க்க ஆணை* பெறலாம். நீங்கள் செல்லும் முன்னர் ஒரு சட்டவாளருடன் பாதுகாப்பாக தொடர்பு கொள்ளலாம், அது உங்களுக்கு சட்ட ஆலோசனையை சீக்கிரமே பெற உதவக்கூடும். உங்கள் குழந்தை அதன் மறு பெற்றாரை சந்திக்க போவதாக இருந்தால் குழந்தைகள் அங்கே போகும் போதும் வரும்போதும் கூட தாத்தா பாட்டி அல்லது பிற உறவினர் அல்லது நண்பர் போன்ற வேறு யாராவது ஒருவர் இருக்க வேண்டுமென நீங்கள் விரும்பலாம். சில இடங்களில் கண்காணிப்புடன்கூடிய பரிமாற்றங்களுக்கான* சேவை கிடைக்கலாம். மறு பெற்றாரிடம் இருக்கும்போது உங்கள் குழந்தையின் பாதுகாப்பு குறித்த கவலை உங்களுக்கு இருக்குமானால் கண்காணிப்புடன்கூடிய சந்திப்புகளுக்கான ஆணை தரும்படி நீதிபதியை கேட்டுக்கொள்ளுங்கள். சில அபூர்வமான சந்தர்ப்பங்களில் மறு பெற்றார் கண்காணிப்பின் கீழும் குழந்தைக்கு ஆபத்தாக இருப்பார்களானால் நீங்கள் சந்திப்புகள் இல்லாமல் செய்ய நீதிபதியை கேட்டுக்கொள்ளலாம்.

நீங்கள் வாழுமிடத்தில் உள்ள குடும்ப நீதி சேவைகளின் பட்டியலை இங்கே பெறலாம்:

http://www.justice.gc.ca/eng/pi/fcy-fea/lib-bib/tool-util/apps/fjis-rsgjf/brows-fure.asp

உங்கள் குழந்தைகள் மற்றும் உங்கள் பாதுகாப்புக்கு தான் முதலிடம். பணத்திற்கு என்ன செய்வோம் என கவலைப்பட்டுக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் இருக்காதீர்கள். உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் வீடு மற்றும் நீண்ட கால ஆதரவிற்கான ஏற்பாடுகள் செய்யும்போது குறுகிய கால உதவியை அடைக்கல மையங்கள் அளிக்கும். நிதி ஆதரவு பெறவும் உங்களுக்கு உதவி செய்யும்.

## பெற்றாரால் குழந்தை கடத்தப்படல்

மறு பெற்றார் அல்லது வேறு யாராவது ஒருவர் உங்கள் குழந்தைகளை நாட்டிற்கு வெளியே கொண்டு போய்

விடுவார்கள் என நீங்கள் நினைத்தால், நீங்கள் கேட்டுக்கொண்டால் குழந்தையின் கடவுச்சீட்டை நீதிமன்றமே வைத்துக்கொள்ளும் படி நீதிபதி உத்தரவிடுவார். உங்கள் குழந்தைகள் கனேடிய குடிமக்களாக இருந்தால், கனடா கடவுச்சீட்டு துறையை 1-800-567-6868 என்ற இலவச எண்ணில் அல்லது TTY சேவைகளை 1-866-255-7655 என்ற எண்ணில் அழைக்கவும் . உங்கள் குழந்தையின் பெயரை ஒரு பட்டியலில் வைத்து வேறு யாராவது அவர்களுக்கு கடவுச்சீட்டு பெற முயன்றால், உங்களுக்கு தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்ளுங்கள்

பிள்ளைகளுக்கு தெரிந்த ஒருவரே பெரிதும் அவர்களை கடத்துவதுண்டு. பிள்ளைகளை பெரிதும் கடத்துபவர் ஒரு பெற்றாரே.

ஒரு குழந்தையை சட்ட உரிமையோ மற்ற பெற்றாரின் அனுமதியோ இல்லாமல் ஒரு பெற்றார் கூட்டிசெல்லும் போது நடப்பது தான் பெற்றாரால் குழந்தை கடத்தப்படல். பெற்றாரால் குழந்தை கடத்தப்படல் கனடாவில் குற்றமாகும். குழந்தையை உடனடி ஆபத்திலிருந்து பாதுகாக்கும்படி ஒரு பெற்றார் குழந்தையை எடுத்து செல்லும் பட்சத்தில் விதிவிலக்கு உண்டு.

## உங்கள் குழந்தை மறு பெற்றாரால் கடத்தப்படலாம் என நீங்கள் பயந்தால் என்ன செய்யலாம்

- சட்டவாளருடன் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் உள்ளூர் போலீஸை தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் குழந்தை குறித்த எல்லா முக்கிய தகவல்களையும் பதிவு செய்து அதை பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.
- குழந்தை வைத்திருப்பு மற்றும் வளர்ப்பு ஆணை அல்லது ஒப்பந்தத்தின் நகல் ஒன்றை வைத்துக்கொள்ளுகள்.
- உங்கள் குழந்தைகளின் பெயர்களை கடவுச்சீட்டு கட்டுபாட்டு பட்டியலில் சேர்க்கும்படி உங்கள் உள்ளூர் கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு சொல்லுங்கள். உங்கள் குழந்தைகள் வேறு நாட்டின் குடிமக்களாக இருந்தால் அந்த நாட்டின் தூதரகத்தை அல்லது தூதாண்மையகத்தை அணுகி, உங்கள் குழந்தைகளுக்கு கடவுச்சீட்டு கொடுக்க மறுக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.
- தொலைபேசியை உபயோகிப்பது எப்படி என்று உங்கள் பிள்ளைக்கு கற்றக்கொடுங்கள். நீங்கள் பிரிந்திருந்தால் அல்லது

விவாகரத்து பெற்றிருந்தால் நீங்கள் பிள்ளையை வைத்திருக்கும் சூழ்நிலை எப்படி நிலவும் என்பதை பிள்ளைக்கு சொல்லி வையுங்கள்.

- மறு பெற்றாருடனும் கூட்டுக் குடும்ப அங்கத்தவர் எவருடனும் நல்லுறவு வைத்திருப்பது பாதுகாப்பானது என்றால், அப்படிச் செய்ய முயலவும்.
- குடும்ப வன்முறை பற்றிய நிழற்படங்கள், பதிவுகள் அல்லது மற்ற ஆதாரங்களை வைத்துக்கொள்ளவும்.

## உங்கள் குழந்தை கடத்தப்பட்டிருந்தால்

- உங்கள் உள்ளூர் போலீஸை உடனடியாக தொடர்புக்கொள்ளவும்.
- நீங்கள் நாட்டிற்கு வெளியே இருந்தால் மத்திய அரசின் தூதாண்மை சேவைகளை 613-996-8885 என்ற எண்ணில் அழைத்து காணாமல் போன விவரத்தை தெரிவிக்கவும். கிடைக்குமிடமெல்லாம் மறுதரப்பு கட்டண அழைப்பை நீங்கள் பயன்படுத்தலாம்.
- கனடாவில் நீங்கள் இருந்து உங்கள் குழந்தை கனடாவிற்கு வெளியே இருப்பதாக நீங்கள் நினைத்தால் மத்திய அரசின் தூதாண்மை சேவைகளை 1-800-387-3124 என்ற எண்ணில் அழைக்கவும்.
- உங்கள் மாகாணம் அல்லது பிரதேசத்தில் உள்ள குழந்தை தேடுதல் நிறுவனத்தை தொடர்புக்கொண்டு குழந்தை காணாமல் போனதை பதிவுசெய்யவும்.

## நீங்கள் கனேடிய குடிமகனாக இல்லாவிட்டால்

துர்ப்பிரயோகத்தோடு நீங்கள் வாழ வேண்டிய அவசியமில்லை. கனடாவில் உங்கள் அந்தஸ்து குறித்து நீங்கள் கவலை கொண்டிருந்தீர்களானால், கனடா குடியுரிமை மற்றும் குடிநுழைவு அலுவலர், சட்டவாளார் அல்லது சமூக பணியாளர் அல்லது ஒழுங்குமுறை மன்றத்தின் குடிநுழைவு ஆலோசகர்கள் சங்கத்தின் உறுப்பினர் போன்ற சரியான தகவல் தரக்கூடிய யாரிடமாவது பேசுங்கள். நீங்கள் ஒரு மோசமான சூழ்நிலையை விட்டு

நீங்கள் ஏற்கனவே அகதி அல்லது நிரந்திர குடியுரிமை பெற்றிருந்தால் உங்கள் துணைவரிடமிருந்து அகல்வது உங்கள் அந்தஸ்தை பாதிக்காது .

சென்றிருந்தாலும் நீங்கள் நிதி உதவி மற்றும் சேவைகள் பெற தகுதியுடையவர் தான் என்பதை மனதில் கொள்ளுங்கள். நம்பகமான தகவல் பெறுவதை உறுதி செய்யவும்.

## நீங்கள் பிரிந்துசெல்வதாக இருந்தால் எடுக்க வேண்டிய பொருட்கள்

அவசர சூழலில் எவ்வளவு சீக்கிரம் செல்ல முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சென்றுவிடுங்கள்.பொருட்களை சேகரிப்பதற்காக நிற்காதீர்கள், போய்விடுங்கள். எனினும், உங்களுக்கு நேரம் இருந்தால் பின்வரும் காரியங்களை செய்ய முடியுமா என்று பாருங்கள் :

- பிறப்பு சான்றிதழ்கள், சுகாதார பராமரிப்பு அட்டைகள், கடவுசீட்டுகள், குடிநுழைவு காகிதங்கள், குழந்தை பாதுகாப்பு காகிதங்கள், நீதிமன்றன ஆணைகள், சமூக காப்புறுதி எண்கள் போன்ற முக்கிய ஆவணங்கள்
- பணம், கடன் அட்டைகள், வங்கி அட்டைகள்
- காசோலை புத்தகம், வங்கி புத்தகம் , சேமிப்பு பத்திரங்கள்
- மருந்து
- தனிப்பட்ட தொலைபேசி மற்றும் முகவரி புத்தகம்
- வீட்டு சாவிகள்
- சாரதி உரிமம், கார் சாவிகள்
- குழந்தைகளுக்கு பிரியமான பொம்மைகள்.
- ஒரு சில நாட்களுக்கான உடைகள், மற்றும்
- விலைமதிப்பு மிக்க நகைகள்.

நீங்கள் விட்டு செல்வதை குறித்து யோசிப்பதாக இருந்தால், இந்த எல்லா பொருட்களையும் ஒரே இடத்தில் வைப்பது நல்லது. அந்த இடம் பாதுகாப்பானதாகவும் எளிதில் நீங்கள் அணுக கூடியதாகவும் இருக்க வேண்டும்

# யார் உதவ முடியும்?

## உதவி கிடைக்கிறது

நீங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகி உள்ளீர்களானால் உங்களுக்கு உதவக்கூடிய நபர்கள் இருக்கிறார்கள். உங்கள் கதையை சொல்லிச்சொல்லி நீங்கள் சோர்வடைந்திருக்கலாம் ஆனால் உங்கள் கதையை கேட்டு உதவக்கூடிய யாராவது கிடைக்கும் வரை முயற்சி செய்யுங்கள்.

யாராவது ஆபத்தில் இருப்பதை நீங்கள் அல்லது யாராவது அறிந்தீர்கள் என்றால் 9-1-1-ஐ அழையுங்கள். உங்கள் பகுதியில் 9-1-1 சேவை இல்லையெனில், உங்கள் உள்ளூர் போலீஸ் அவசர எண்ணை அழைக்கவும். ஆபத்தான சூழ்நிலைகளை கையாள உங்களுக்கு உதவும் படி போலீஸுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விசாரணை செய்யவும் அமைதிகாப்பு முறி* பெறவும் உங்களுக்கு உதவுவார்கள். பாதிக்கப்பட்டவர் சேவைகளுக்கு உங்களை அனுப்பிவைப்பார்கள். பாதிக்கப்பட்டவர் சேவைகள் அல்லது சட்டவாளர், துர்ப்பிரயோகம் செய்யும் நபரை உங்களிடமிருந்து அகற்றிவைக்க உதவும் குற்றவியல் அல்லாத பாதுகாப்பு ஆணை* பெற அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

சூழ்நிலை தற்போது ஆபத்தாக இல்லாவிட்டாலும் சுகாதார மையம், பாதிக்கப்பட்டவர் சேவைகள், சமுதாய அமைப்பு, அடைக்கல மையம், அல்லது உள்ளூர் போலீஸை அழைத்து துர்ப்பிரயோகம் குறித்து சொல்லலாம். அவர்கள் நீங்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என தீர்மாணிக்க உதவுவர்.

போலீஸ் சமூக சேவகர் அல்லது சட்டவாளர் போன்ற அதிகாரிகளிடம் தகவல்கள் கேட்கும் போது உங்களை குறித்த காரியங்களை நம்பகத்தன்மை*யுடன் இரகசியமாக வைக்கும் படி நீங்கள் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.

தகவல்கள் ஆதரவு அல்லது அவசர உதவி தந்து உங்களுக்கு உதவக்கூடிய நபர்கள் அல்லது குழுக்களை கண்டுபிடிக்க கீழே உள்ள பட்டியல் உங்களுக்கு உதவமுடியும்.

இந்த எண்கள் அல்லது இணைப்புகள் மாறலாம். அவ்வப்போது புதிய எண்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

### சமுதாய நிறுவனங்கள்

பல சமுதாய நிறுவனங்கள் சமூக சேவைகள் அளிக்கின்றன. இந்த நிறுவனங்களில் உங்கள் பிரச்சனைகளை கேட்கக்கூடிய நபர்கள் இருப்பார்கள் அவர்களிடம் உங்கள் தேர்வுகள் குறித்த பேசுங்கள். தேவைப்பட்டால் அவர்கள் உங்களை சட்டவாளரிடம் அனுப்புவார்கள் அல்லது நிதி உதவி போன்ற பிற சேவைகளை பெற உங்களை அனுப்பி வைப்பர். சில சமுதாய நிறுவனங்களில் இச்சேவைகள் உங்கள் மொழியிலேயே கிடைக்கலாம். பல் கலாச்சார அல்லது குடிநுழைவு சேவை நிறுவனங்கள் உங்களுக்கு தகவல்கள் அளிக்கவும் உதவியளிக்கும் சேவைகளுக்கு அனுப்பி வைக்கவும் உதவும். மேலும் பார்க்கவும், புதியவரவுகளின் சேவைகளின் கனடா குடிமக்கள் மற்றும் குடிநுழைவு: http://www.servicesfornewcomers.cic.gc.ca

### குடும்ப மருத்துவர் அல்லது பொது சுகாதார தாதியாளர்

துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகியிருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உங்கள் குடும்ப மருத்துவர் உங்களுக்கு அறிவுரை சொல்லலாம். உங்கள் உடல்சார் அல்லது மனரீதியான துன்புறுத்தல்களை கையாள அவர்கள் உதவுவார்கள் அல்லது அல்லது உங்களுக்கு உதவக்கூடிய நபரிடம் அனுப்புவார்கள். பல மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் 24-மணிநேர சுகாதார தொலைபேசி உதவியும் கிடைக்கிறது.

உங்கள் மாகாண அல்லது பிரதேச அரசை அழைத்து உங்கள் சமுதாயத்தில் உள்ள சுகாதார, சமூக ஆதரவு சேவைகள் குறித்த தகவல்களை அறியலாம் அல்லது உங்கள் உள்ளூர் சமுதாய மையத்தை அணுகி அறிவுரை பெறலாம். அவர்கள் உங்களுக்கு தகவல்கள் ஆலோசனைகள் அளிக்க முடியும் மேலும் தேவைப்பட்டால் சமூகசேவகர்களிடம் அனுப்பியும் வைப்பார்கள். உங்கள் உள்ளூர் எண்களை உங்கள் தொலைபேசி புத்தகம் அல்லது இணையத்தில் பார்க்கவும்.

### நண்பர்கள், குடும்பம், அக்கம்பக்கத்தினர்

துர்ப்பிரயோகம் குறித்து நீங்கள் நம்பும் ஒருவரிடம் பேசுங்கள். உங்களுக்கு என்ன நடக்கிறதென்று தெரியாமல் மக்கள் உங்களுக்கு எப்படி உதவ முடியும்.

### உதவி இணைப்புகள்

உங்கள் பெயரை அளிக்காமலேயே 24 மணி நேரமும் அழைக்கக்கூடிய தொலைபேசி சேவைகள் (சிலநேரங்கள் நெருக்கடி இணைப்புகள் என்றழைக்கப்படுகின்றன) இருக்கின்றன. தொலைபேசியை எடுக்கும் நபர் நீங்கள் சொல்வதை கவனித்து நீங்களும் பாதுகாப்பாக இருப்பது மற்றும் உங்கள் குழந்தைகளை பாதுகாப்பாக வைப்பது குறித்த முக்கிய முடிவுகளை எடுக்க உதவுவார். தொலைபேசி எண்களை தொலைபேசி புத்தகம் அல்லது இணையத்தில் பார்க்கவும். இப்போது உடனே நீங்கள் உதவியை நாட விரும்பவில்லை என்றாலும் இந்த தொலைபேசி எண்களின் பட்டியலை நீங்கள் எளிதில் அணுகக்கூடிய பாதுகாப்பான இடத்தில் வைத்து விடுங்கள்.

### மருத்துவமனை

நீங்கள் படுகாயமடைந்திருந்தால், மருத்துவமனைக்கு செல்லவேண்டும். மருத்துவமனைகளில் அவசர உதவி ஊழியர்கள் இருப்பார்கள். அவர்கள் நீங்கள் காயமடைந்திருந்தாலோ ஏதாவது சுகாதார அவசரம் இருந்தாலோ அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். அவர்களுக்கு குடும்ப வன்முறை குறித்து சிறப்பு அறிவும் இருக்கலாம். மருத்துவர்களிடமும் தாதியாளர்களிடமும் நடந்த உண்மைகளை கூறிவிடுவது சிறந்தது.

நீங்கள் கனேடிய குடிமகனாக இல்லாவிட்டாலும் கூட உங்களுக்கு ஆரோக்கிய கவனிப்பு கிடைக்கும். சட்ட ரீதியாக கனடாவில் தங்க தகுதிப்பெற்ற- அகதி, நிரந்திர குடியுரிமை பெற்றவர் அல்லது ஸ்பான்சர் செய்யப்பட்ட துணைவர் – இதில் யாராக இருந்தாலும் மூன்று மாதங்களுக்கு பிறகு மாகாண அல்லது வட்டார ஆரோக்கிய காப்பீட்டின் கீழ் ஆரோக்கிய கவனிப்பு உங்களுக்கு கிடைக்கும். அகதி அந்தஸ்து கோரி இருப்பவர்களும் கனடா குடியுரிமை மற்றும் குடிநுழைவு வழங்கும் ஆரோக்கிய கவனிப்பை பெறலாம். சுற்றலாவாசிகள் அல்லது தற்காலிக வருகைதருவோர் ஆகியோர் ஆரோக்கிய காப்பீட்டை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். ஆரோக்கிய காப்பீடு குறித்து மேலதிக விபரங்களுக்கு உங்கள் மாகாண அல்லது வட்டார ஆரோக்கிய தகவல் இணைய தளத்தை பார்க்கவும் அல்லது உங்கள் மாகாண அல்லது வட்டார ஆரோக்கிய சேவையை அழைக்கவும்.

www.cic.gc.ca என்ற கனடா குடியுரிமை மற்றும் குடிநுழைவு இணைய தளத்தையும் பார்க்கலாம்

*சட்ட சேவைகள்*

*ஒரு வழக்கறிஞர் அல்லது ஒரு சட்ட உதவி அலுவலகத்திலிருந்து* சட்ட உதவி கிடைக்கும். சட்டவாளர் சேவை, ஒரு சட்ட உதவி அலுவலகம் அல்லது ஒரு பொது சட்ட கல்வி மற்றும் தகவல் சங்கம் போன்றவற்றை அணுகி சட்ட உதவி எங்கே பெற முடியும் மற்றும் கட்டணமில்லாமல் உதவி பெற முடியுமா எனவும் அறியலாம்.*

*போலீஸ்*

*குடும்ப வன்முறையை கையாளுவது எப்படி என்பது குறித்து பல போலீஸ் அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. கனடா முழுவதுமுள்ள பல போலீஸ் சேவைகள் , போலீஸ் அலுவலர்களை கொண்ட விசேஷ வீட்டு தாக்குதல் பிரிவுகள் உள்ளன. உங்கள் பிரச்சனைகளை கேட்டு உதவ முயற்சிக்கும் பிற நிபுணர்களும் உள்ளனர். போலீஸ், உங்களை பாதிக்கப்பட்டவர் சேவைகளுக்கு அனுப்பலாம். உங்கள் தொலைபேசி புத்தகத்தின் முதல் சில பக்கங்களை பார்த்து தொலைபேசி எண்ணை எடுக்கவும். அவசர உதவிக்கு* 9-1-1 *அல்லது உங்கள் போலீஸ் அவசர எண்ணை அழைக்கவும்.*

*பொது சட்ட கல்வி மற்றும் தகவல் திட்டங்கள்*

*சட்டம், சட்ட அமைப்பு மற்றும் உங்கள் உரிமைகள் குறித்து இந்த நிகழ்முறைகளால் பொது தகவல்களை அளிக்க முடியும். குடும்ப வன்முறை குறித்த கூடுதல் தகவல்களை கனடா நீதித்துறையின் குடும்ப வன்முறை தடுப்பு முயற்சி இணையதளம் :* http://*கனடா*.justice.gc.ca/eng/pi/fv-vf/plei-vij/index.html *பார்க்கவும்*

*மத நிறுவனங்கள்*

*உங்கள் தொழுகை இடத்தில் நீங்கள் நம்புகிற நபர் யாராவது இருந்தால் என்ன நடக்கிறது என்பதை அவர்களிடம் சொல்லுங்கள்.*

*அடைக்கலங்கள்*

*நீங்களோ உங்கள் குழந்தைகளோ ஆபத்தில் இருந்தால் ஒரு*

அடைக்கல மையம் உங்களுக்கு தற்காலிக உதவியும் பாதுகாப்பாக தங்க ஒரு இடமும் அளிக்கும். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை கையாள ஊழியர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நீங்கள் எதை எதிர்பார்க்க வேண்டும் என்றும் நீங்கள் பாதுகாப்பாக இருப்பது எப்படி என்றும் உங்கள் குழந்தைகள் பாதுகாப்பாக வைப்பது எப்படி என்றும் அவர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள்.

### பாதிக்கப்பட்டவர் சேவைகள்

பாதிக்கப்பட்டவர் சேவை நிறுவனங்கள் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ போலீஸுடன் சேர்ந்து உழைக்கிறார்கள். உங்களை பாதுகாத்து கொள்ள வழிகளை கண்டுப்பிடிக்கவும், ஒரு திட்டத்தை உருவாக்கவும் அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். உணவு, உடை மற்றும் அடைக்கலம் ஆகிய சேவைகள் அளிக்கும் நபர்களோடு உங்களுக்கு தொடர்பை ஏற்படுத்துவார்கள். நீங்கள் உங்களுக்கு வசதியான மொழியில் யாருடனாவது பேச ஏதுவாக மொழிப்பெயர்ப்பாளர்களை வழங்கி சேவை அளிப்பார்கள். கனடா எங்கும் அளிக்கப்படும் சேவைகள் பற்றி அறிய, பாதிக்கப்பட்டவர் பிரச்சனைகளுக்கான கொள்கை மைய பாதிக்கப்பட்டவர் சேவைகள் கோப்பு வலைதளத்தை பார்க்கவும். http://கனடா.justice.gc.ca/eng/pi/pcvi-cpcv/vsd-rsv/index.html

முக்கியம் -மேலே உள்ள பட்டியலில் உள்ள ஏதாவது தொலைபேசி எண்ணை நீங்கள் அழைக்கும் போது உங்கள் தொலைபேசியில் மீளழைப்பு வசதி (re-dial) இருந்தால் போலீஸ், நெருக்கடி இணைப்பு, பெண்கள் பாதுகாப்பு அடைக்கலம் அல்லது பாதிக்கப்பட்டவர் சேவைகள் ஊழியர் போன்றோரை அழைத்த பின்னர் வேறு ஏதாவது எண்களை அழைத்து வைத்துவிடுங்கள் அல்லது நீங்கள் செல்பேசியிலிருந்து அழைத்தால் உடனே அந்த எண்களை அழித்துவிட மறக்காதீர்கள். இந்த வழியில் உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் நீங்கள் என்ன செய்யகிறீர்கள் அல்லது திட்டமிடுகிறீர்கள் என்பதை அறியமுடியாது.

## உங்கள் நண்பர் அல்லது உறவினர் தாங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாவதாக கூறினால் என்ன செய்வீர்கள்?

அவர்களுக்கு காது கொடுங்கள். நீங்கள் நினைப்பதை விடவும் சூழ்நிலை அதிக சிக்கலாக அல்லது அதிக அபாயகரமாக இருக்கலாம். அவர்கள் உதவிபெற வேண்டுமென ஆலோசனை கூறுங்கள் நிபுணரின் உதவியை நாடுவதில் எந்த அவமானமுமில்லை என்பதை சொல்லுங்கள்.

துர்ப்பிரயோகம் குறித்து ஏதாவது செய்ய வேண்டுமென தீர்மானிக்கவே ஒருவருக்கு அதிக நேரம் தேவைப்படுகிறது. தொடர்ந்து காது கொடுத்து கேளுங்கள். அவர்களை ஒரு ஆலோசகரிடத்தில் அழைத்து செல்லுங்கள். ஒரு ஆலோசகரிடம் கூட்டிச்செல்ல முன்வாருங்கள். நெருக்கடி இணைப்பு* அல்லது உதவி இணைப்புகளின் தொலைபேசி எண்கள் சிலவற்றை அவர்களுக்கு கொடுக்கவும். துர்ப்பிரயோகத்திற்கு ஆளானவர்கள் தனிமைப்பட்டவர்களாகவும் வலுவற்றவர்களாகவும் உணர்வு ரீதியாக சோர்வுற்றவர்களாகவும் செயலிழந்தவர்களாகவும் மாறுவர்கள், அவர்களுக்கு ஆதரவாக இருப்பதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு உதவுகிறீர்கள்.

துர்ப்பிரயோகம் செய்வோருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் உதவ பல சேவைகள் உள்ளன. போலீஸ் சேவைகளுக்கு அல்லது சிறப்பு குடும்ப வன்முறை சேவைகளுக்கு நீங்கள் அனுப்பிவைக்கப்படலாம். சூழ்நிலை ஆபத்தாக இருக்குமானால் 9-1-1 அல்லது உங்கள் போலீஸ் அவசர எண்ணை அழையுங்கள். துர்ப்பிரயோகம் செய்பவரை நேரடியாக எதிர்கொள்ளாதீர்கள் – அது உங்களுக்கோ துர்ப்பிரயோகத்திற்கு ஆளானவருக்கோ ஆபத்தாகிவிடலாம்.

# நீங்கள் போலீஸை அழைத்தால் என்ன நடக்கும்?

யாராவது உங்களை துர்ப்பிரயோகம் செய்தால், நீங்கள் போலீஸில் சொல்ல வேண்டும். கனடாவிலுள்ள எல்லா மாகாணங்களிலும் மற்றும் பிரதேசங்களிலும் போலீஸூம், அரச வழக்குத்தொடுநர்* ஆகியோரிடம் கணவன்/மனைவி துர்ப்பிரயோகம் தொடர்பான கொள்கைகள்* 1980-களின் ஆரம்பம் முதலே இருக்கிறது. இந்த கொள்கைகள் கணவன்/மனைவி வன்முறை ஒரு குற்ற செயலாக பார்க்கப்படுவதை உறுதி செய்கின்றன.

ஒரு நபர் சட்டத்தை மீறியதாக போலீஸ் நம்பினால் அந்நபரை அவர்கள் கைது செய்யக்கூடும். அந்த நபர் சில மணி நேரம் பிணை விசாரணை* நடைபெறும் வரை அல்லது நீதிபதி தீர்மானிப்பதின்படி கூடுதல் சமயம் சிறையிலிருக்க வேண்டும்.

உங்கள் பாதுகாப்பு குறித்து உங்களுக்கு அச்சமிருந்தால், அந்நபர் சிறையிலிருந்து வெளியே வரும் போது உங்களுக்கு தகவல் சொல்லும் படிக்கு போலீஸை கேட்டுக்கொள்ளுங்கள். உங்களை துர்ப்பிரயோகம் செய்தவரின் விடுதலைக்கு நீதிபதி சில விதிகளை வைக்கலாம். உதாரணமாக, அந்த நபர் உங்களை தொடர்பு கொள்ள நீதிபதி தடை விதிக்கலாம்.

சிறையில் வெளியே வரும் நபர் உங்களை துன்புறுத்தக்கூடுமென நீங்கள் நினைத்தால் ஒரு நண்பர் அல்லது ஒரு அடைக்கல மையம் போன்ற ஒரு பாதுகாப்பான இடத்தை கண்டுபிடிக்க நீங்கள் விரும்பக்கூடும்.

சில மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் உங்களுக்கு குற்றவியல் அல்லாத அவசர பாதுகாப்பு உத்தரவு* பெற முடியும். அது உங்களை துர்ப்பிரயோகம் செய்யும் நபர் உங்களுடன் தொடர்புகொள்ளக் கூடாது என்று சொல்லும் ஒரு நீதிமன்ற உத்தரவு போன்றது. உங்களை துர்ப்பிரயோகம் செய்த நபர் குடும்ப வீட்டை விட்டு குறிப்பிட்ட காலத்திற்கு வெளியே தங்க வேண்டும் என உத்தரவு குறிப்பிடலாம். இதை எப்படி அணுக வேண்டும் என்பது குறித்த சட்ட தகவலை நீங்கள் கேட்டு பெறலாம். அவசர பாதுகாப்பு உத்தரவு கிடைக்கவில்லை என்றால் நீங்கள் ஓர் அமைதிகாப்பு முறியை நாடலாம்.

## உங்களை துர்ப்பிரயோகம் செய்தவருக்கு எதிராக போலீஸ் நடவடிக்கை எடுத்தால் என்ன நடக்கும்?

உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் குற்ற செயல்செய்தவராக கண்டுபிடிக்கப்பட்டால் ஒரு தண்டனைத்தீர்ப்பு* குறித்து நீதிபதி முடிவு செய்வார். தண்டனைத்தீர்ப்பு என்பது தண்டமாகவோ* அல்லது நன்னடத்தைக் கண்கணிப்பகவோ* இருக்கலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்த நபருக்கு ஆலோசனைகளும்* வழங்கப்படும். நீதிபதி சிறை வாசத்துக்கும் உத்தரவிடலாம். சிறைத் தீர்ப்பை அளிக்கலாமா வேண்டாமா என முடிவு செய்ய நீதிபதி பல காரியங்களை கருத்தில் கொள்ளுவார். உதாரணமாக, இது முதல் முறையா, அந்த துர்ப்பிரயோகம் எவ்வளவு கடுமையானது என நீதிபதி பார்க்கலாம்.

உங்களுக்கு பயமாக இருந்தால் அல்லது உங்கள் பாதிக்கப்பட்டவர் சேவைகள் பணியாளரிடம்* சொல்லுங்கள். உங்களை துர்ப்பிரயோகம் செய்தவருக்கு நன்னடத்தைக் கண்கணிப்பு அளிக்கப்பட்டிருந்தால் நீதிபதி அவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்யலாம்.

துர்ப்பிரயோகம் செய்தவர்கள் நீதிபதியிடம் தாங்கள் குற்றம் செய்யவில்லை என சொன்னால் ஒரு விசாரணை நடத்தப்படலாம். விசாரணை தொடங்குவதற்கு பல மாதங்கள் ஆகலாம்.நீங்கள் அந்த விசாரணையில் சாட்சியாக இருக்கவேண்டும்.நீங்கள் சாட்சியாக இருக்கும்போது நீங்கள் சௌகரியமாக இருக்க நீதிமன்றம் பல காரியங்களை செய்துத்தரக்கூடும். திரைக்கு பின்னாலிருந்து நீதிபதியுடன் பேச முடியும் அல்லது உள்-சுற்று தொலைக்காட்சி* வாயிலாக வேறு அறையிலிருந்து பேச முடியும். இதனால் உங்களை துர்ப்பிரயோகம் செய்த நபரை நீங்கள் பார்க்க வேண்டி வராது. நீங்கள் சாட்சியளிக்கும் போதும் உங்களுக்கு அருகில் உங்களுக்கு ஆதரவான ஒரு நபரை கூட வைத்துக்கொள்ளலாம். உங்களை துர்ப்பிரயோகம் செய்தவருக்கு சட்டவாளர் இல்லாவிட்டால் அரச வழக்குத்தொடுநர் நீதிபதியிடம் சொல்லி அவருக்கு ஒரு சட்டவாளரை வைக்கும்படி கேட்டுக்கொள்ளுவார். இதன் மூலம் உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் உங்களை குறுக்கு விசாரணை* செய்வதை தவிர்க்க முடியும்.

உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் குற்றம் செய்தவர் என கண்டறியப்பட்டால் தண்டம், நன்னடத்தைக் கண்கணிப்பு அல்லது சிறை தண்டனை போன்ற ஒரு தீர்ப்பை நீதிபதி வழங்குவார்.

## நினைவு கொள்ளுங்கள், துர்ப்பிரயோகம் செய்ய யாருக்கும் உரிமை இல்லை

குற்ற நீதி அமைப்பு உங்களை பயமுறுத்துவதாக இருக்கலாம், ஆனால் அவர்கள் இருப்பது உங்களை காப்பதற்கும் பாதுகாப்பாக வைப்பதற்கும் தான். அதை கடந்து வர உதவ கூடிய நபர்கள் இருக்கிறார்கள். துர்ப்பிரயோகத்தோடு வாழ்வது மிக கடினமும் அச்சறுத்துவதாகவும் இருக்கக்கூடும். அதிலும் நீங்கள் கனடாவிற்கு புதியவரென்றால், நீங்கள் பல விஷயங்களை ஒரே நேரத்தில் சந்தித்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் கலாச்சார அதிர்ச்சியை எதிர்கொண்டிருக்கலாம். நீங்கள் நிதி நெருக்கடியை அனுபவித்துக்கொண்டிருக்கலாம். உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து நீங்கள் கவலை கொண்டிருக்கலாம். உதவி பெறுவது ஒரு எளிதான விஷயமல்ல ஆனால் அது தான் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் செய்யக்கூடிய சிறப்பான விஷயம். உங்கள் தெரிவுகள் மிக கடினமான விஷயங்களாகும் ஆனால் உங்களுக்கு தெரிந்தெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு.

நீங்கள் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளீர்கள் என்றால், நீங்கள் உதவிபெற வேண்டும். அதை நீங்கள் தனியாக அதை சந்திக்க வேண்டாம். உதவி கிடைக்கிறது. உங்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை உள்ளது.

# இந்த சிற்றேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள்

கவனிக்கவும்: சட்டப் பதங்களை விளங்கிக்கொள்ள பின்வரும் விவரணைகள் உங்களுக்கு உதவக்கூடும். பதங்களின் சட்ட விவரணைகளுக்கு, விரும்பினால் ஒரு சட்டவாளருடன் நீங்கள் கலந்தாலோசிக்கலாம்.

### தாக்குதல்

தாக்குதல் ஒரு குற்றமாகும். ஒரு நபர் மற்றொரு நபரின் சம்மதமில்லாமல் மிரட்டவோ பலத்தையோ உபயோகிப்பதாகும். மிரட்டலை நேரடியாக அல்லது மறைமுக விடுத்திருந்தாலும் அது காரியமில்லை.

### பிணை விசாரணை

ஒரு நபரை கைது செய்து வழக்குபதிவு செய்தால் நீதிமன்றத்தில் நடைபெறுவதுதான் பிணை விசாரணை. அந்த நபர் விடுதலையாக வேண்டுமா அல்லது வழக்கு நீதிமன்றத்திற்கு வரும் வரை சிறையில் இருக்க வேண்டுமா என நீதிபதி முடிவு செய்வார். அந்நபர் விடுதலை ஆவதற்கு நீதிபதி நிபந்தனைகளை விதிக்கலாம். உதாரணமாக, பாதிக்கப்பட்டவரை தொடர்பு கொள்ளக்கூடாது என்று நீதிபதி அந்நபருக்கு உத்தரவிடலாம். பிணை என்பது நீதிமன்ற இடைக்கால விடுதலை என்றும் அழைக்கப்படுகிறது.

### குழந்தை கைவிடல்

குழந்தை கைவிடல் கனடாவில் குற்றமாகும். ஒரு நபர் குழந்தையை தெரிந்துகொண்டே கைவிடல் அல்லது குழந்தையின் ஆரோக்கியத்தை நிரந்திரமாக பாதிக்கக்கூடிய

வகையில் அல்லது குழந்தையின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் 10 வயதிற்கும் குறைவான குழந்தையை விட்டுவிடும் போது நடப்பது தான் குழந்தை கைவிடல்.

### குழந்தை பாதுகாப்பு சேவைகள்

ஒவ்வொரு மாகாணத்திலும் பிரதேசத்திலும் குழந்தை பாதுகாப்பு சேவைகள் இருக்கின்றன. குழந்தை துர்ப்பிரயோகம் மற்றும் உதாசீனம் குறித்து வரும் புகார்களை அவை ஆராயும். குழந்தை பாதுகாப்பு சேவைகளை "குழந்தை நலம்," "குழந்தைகள் உதவி" அல்லது "இளைஞர் பாதுகாப்பு" என்றும் அழைக்கலாம்.

குழந்தை பாதுகாப்பு சேவை, ஒரு குழந்தைக்கு பாதுகாப்பு தேவை என்று முடிவு செய்தால், அவர்கள் பின்வருபவற்றை செய்யலாம்:

- குடும்பத்திற்கு ஆலோசனை மற்றும் ஆதரவு அளித்தல்;அல்லது
- வீட்டிலிருந்து சிறிது காலத்திற்கு அல்லது நிரந்திரமாக குழந்தையை அகற்றுதல்

### உள்-சுற்று தொலைக்காட்சி

நீதிமன்ற அறைக்கு வெளியே காணொளி படப்பிடிப்பு கருவிகளை பயன்படுத்தி நீதிமன்றத்திற்கு தகவல்களை அளிப்பதாகும்.

### நம்பகத்தன்மை

நம்பகத்தன்மை என்றால் இரகசியம் அல்லது தனிப்பட்ட காரியங்களை பாதுகாத்தல் என்பதாகும்.

### சம்மதம்

சம்மதம் அளிப்பதென்றால் ஒத்துக்கொள்ளுவது. ஆனால் சட்டப்படி "சம்மதம்" என்பது வெறுமனே "ஆம்" சொல்வதை விட அதிக சிக்கலானது, ஒத்துக்கொள்ள உங்களை யாராவது கட்டாயப்படுத்தினால், உதாரணமாக உங்களை துன்புறுத்தியோ அல்லது துன்புறுத்த போவதாக மிரட்டியோ சம்மதம் பெற்றால் அது உண்மையான சம்மதமல்ல. நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முழு சூழ்நிலை குறித்து உங்களுக்கு விளக்கப்படாமல் நீங்கள்

*சம்மதம் அளித்திருந்தால், அதுவும் சம்மதம் அளித்ததாகாது. சில சமயங்களில் சம்மதம் அளிக்க சட்டம் அனுமதி அளிப்பதில்லை. உதாரணமாக, பாலியல் செயல்பாடு போன்ற குறிப்பிட்ட காரியங்களுக்கு குழந்தைகள் சம்மதம் அளிக்கமுடியாது. நீங்கள் பெரியவராக இருந்தாலும் மயக்கநிலை அல்லது தூக்கத்தில் பாலியல் செயல்பாட்டிற்கு சம்மதம் அளிக்க முடியாது. மௌனம் சம்மதமல்ல.*

### ஆலோசனையளித்தல்

*ஒரு நிபுணரை நீங்கள் ஒழுங்காக சந்தித்து பிரச்சனைகள் குறித்து பேசி அவற்றை தீர்க்கும் வழியில் உதவி பெறும் முறைதான் இது. ஆலோசனையளிப்பவர்கள் மக்களுக்கு அவர்களது பிரச்சனைகளில் உதவ பயிற்சி பெற்றுள்ளனர். சிலநேரங்களில் மக்களுக்கு தனித்தனியாக ஆலோசனை (ஆலோசகரை தனியாக சந்தித்தல்), தம்பதி ஆலோசனை (தம்பதியாக ஆலோசகரை சந்தித்தல்), குடும்ப ஆலோசனை (குடும்பமாக ஆலோசகரை சந்தித்தல்) அல்லது குழு ஆலோசனை (ஒரே போன்ற பிரச்சனைகளை அனுபவித்தவர்கள் சேர்ந்து ஆலோசகரை சந்தித்தல்) ஆகியவை அளிக்கப்படுகிறது.*

### குற்றவியல் சட்டம்

*குற்றவியல் சட்டம் என்பது கனடாவில் குற்றங்களாக கருதப்படும் பெரும்பாலான குற்றங்கள் குறித்து சொல்வதாகும். சிறு குற்றசெயல்களும் குற்றங்கள் என்றழைக்கப்படுகின்றன. குற்றவியல் சட்டம் கனடா முழுவதிற்கும் பொருந்தும்.*

### குற்றச்செயல்

*குற்றச்செயல் என்பது குற்றவியல் சட்டத்தை மீறினால் நடப்பதாகும். இதுவும் குற்றமாகும்.*

### நெருக்கடி இணைப்புகள் அல்லது உதவி இணைப்புகள்

*தகவல் மற்றும் அறிவுரைகளை பெற உதவும் நெருக்கடி இணைப்பு அல்லது உதவி இணைப்பு என்பது ஒரு இலவச தொலைபேசி சேவையாகும். நீங்கள் அழைக்கும் போது உங்கள் பெயர் அல்லது தொலை பேசி எண்ணை நீங்கள் யாருக்கும் கொடுக்க வேண்டியதில்லை.*

யாராவது தொலைபேசியை எடுத்து நீங்கள் சொல்வதை கவனிப்பார்கள். உங்கள் கேள்விகளுக்கு இயன்ற வரை பதில் சொல்வார்கள். உங்களுக்கு உதவி கிடைக்கக்கூடிய இடத்திற்கு அனுப்பி வைப்பார்கள். தொலைபேசி புத்தகத்தில் பல வகையான உதவி இணைப்புகள் பட்டியலிடப்பட்டிருக்கும். பேருந்துகள், சிகிச்சையகங்கள் மற்றும் இடங்களில் அவை விளம்பரப்படுத்தப்பட்டிருக்கும்.

### அரச வழக்குத்தொடுநர் அல்லது அரச சட்டத்தரணி

அரசாங்கம் சார்பாக இருக்கும் சட்டவாளரை அது குறிக்கிறது. அரசாங்க சட்டவாளர் குற்றம் நடந்தவுடன் நீதிபதிக்கு அவ்வழக்கை விவரிப்பார். துர்ப்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் உங்களுக்கான சட்டவாளராக அரச சட்டவாளர் இருக்கமாட்டார். அவர் பொது மக்களின் சார்பாக செயல்படுவர்.

### குறுக்கு-விசாரணை

கனேடிய சட்ட அமைப்பில் விசாரணையின் போது பயன்படுத்தப்படும் முறையாகும். எதிர்க்கட்சி வழக்கறிஞர் சாட்சியை கேள்விக்கணைகளால் துளைப்பதாகும் இது. (பல கேள்விகளை கேட்டல்).

### கலாச்சார அதிர்ச்சி

நீங்கள் புதிய இடத்திற்கு வந்தவுடன் அதுவும் ஒரு புதிய நாட்டிற்கு வந்தவுடன் புதிய சூழலாக இருப்பதால் உங்களுக்கு குழப்பமாகவும் பதட்டமாகவும் இருக்கலாம். இந்த உணர்வு தான் கலாச்சார அதிர்ச்சி. பேசப்படும் மொழியை புரிந்துக்கொள்வதில் உங்களுக்கு பிரச்சனை இருக்கலாம். நீங்கள் இங்கே அந்நியர் என்ற உணர்வு மேலோங்கி இருக்கலாம். பருவநிலை, உணவு, வீடு, உங்களை சுற்றியுள்ள வாசனைகள் மற்றும் சத்தங்கள் உங்களுக்கு பழக்கமில்லாததாக இருக்கலாம்.

உங்கள் குழந்தைகள் மீதான புதிய தாக்கங்கள் உங்களை அசௌகரியமாக உணரச்செய்யலாம். பொதுவாக கலாச்சார அதிர்ச்சி உணர்வு உங்களை சுற்றியுள்ளவற்றுக்கு பழக்கமான பின்னர் அந்த உணர்வு போய்விடும்.நாளாக நாளாக புதிய இடம் "உங்கள் வீடாகிவிடும். நீங்கள் இந்த இடத்துடன் ஒன்றிவிடுவீர்கள்.

## வைத்திருப்பு அல்லது குழந்தை வளர்ப்பு கட்டளை

உங்கள் குழந்தைகளை பாதுகாக்கும் உரிமை உங்களுக்கு உண்டென்றால், அவர்களது வளர்ப்பு படிப்பு போன்ற காரியங்களில் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்பு சட்டப்படியாக உங்களுடையது.. உங்கள் குழந்தைகளை பாதுகாப்பதற்கான தனி உரிமை உங்களுக்கு மட்டுமே இருந்தால் குழந்தைகள் உங்களுடன் இருப்பார்கள். ஆனால் மறு பெற்றாரும் குழந்தைகளை சந்திக்க வரலாம்.

பெற்றோருக்கு கூட்டு பாதுகாவல் உரிமையிருந்தால், முக்கிய முடிவுகளை சேரந்து எடுக்க வேண்டும். "குழந்தை வளர்ப்பு ஆணை", என்ற வேறொரு வார்த்தை உங்கள் மாகாணம் அல்லது பிரதேசத்தில் பயன்படுத்தப்படலாம். குழந்தை எப்படி வளர வேண்டும் மற்றும் எப்படி குழந்தையின் நேரம் இரு பெற்றோரிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது குறித்த விவரங்களை குழந்தை வளர்ப்பு ஆணை தெரிவிக்கிறது. குழந்தையின் நலனை முன்னிட்டு வைத்திருப்பு மற்றும் குழந்தை வளர்ப்பு ஆணைகள் விடுக்கப்படுகின்றன.

## சீதன மோசடி

சில கலாச்சாரங்களில், மணமகள் திருமணத்தின் போது தன்னுடன் சீதனம் என்றழைக்கப்படும் பணம் அல்லது பிற விலை உயர்ந்த பொருட்களை கொண்டுவருவது பாரம்பரியமாக உள்ளது. சீதனத்துக்காக வேண்டி மட்டும் திருமணம் செய்யும் ஆண்கள் உண்டு. அதன் பிறகு அவர்கள் திருமணத்தை முறித்து விடுவார்கள், ஆனால் விலையுயரந்த பொருட்களை வைத்துக்கொள்வார்கள். இது சீதன மோசடி என்றழைக்கப்படுகிறது.

## பராமரிக்கும் கடமை

ஒரு நபருக்கு கெடுதல் விளையாதபடி ஒரு நபர் மற்றொரு நபருக்கு குறைந்த பட்ச பராமரிப்பை அளிக்க சட்டரீதியான கடமை இருப்பது தான் பராமரிக்கும் கடமையாகும். உதாரணமாக, தங்களை சார்ந்துள்ள குழந்தைகளுக்கு பராமரிப்பு அளிக்கும் கடமை பெற்றோருக்கு இருக்கிறது. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பராமரிக்க வேண்டிய கடமையுண்டு.

### வாழ்க்கைக்கு தேவையானவற்றை அளிக்க தவறுதல்

ஒரு பெற்றார், வளர்ப்பு பெற்றார், பாதுகாவலர் அல்லது குடும்பத்தலைவர் 16 வயதிற்கு குறைவான குழந்தைக்கு வாழத் தேவையானதை அளிக்கத் தவறினால் அது குற்றமாகும். அது குழந்தைக்கு தேவையான உணவு, வாழ்விடம், அல்லது மருத்துவ உதவி  உள்ளிட்டவைகளை அளிக்க தவறுதலாகும். துணைவர் அல்லது கூடிவாழும் துணைவருக்கு வாழத்தேவையானதை அளிக்கத்தவறுவதும் குற்றமாகும். குழந்தைக்கு தேவையானதை அளிப்பது "பராமரிக்கும் கடமையின்" பாகமாகும்.

### தண்டம்

தீர்ப்பாகவோ  தீர்ப்பின் பாகமாகவோ குற்றம் செய்தவருக்கு (தவறு செய்தவருக்கு) வழங்கப்படும் நீதிமன்ற ஆணையாகும். குற்றவாளி கட்ட வேண்டிய பணத்தை இது குறிக்கிறது.

### நெருங்கிய துணைவர்

கணவர், மனைவி, கூடிவாழும் துணைவர் அல்லது முன்னாள் துணைவர் ஆகியவர் தான் நெருங்கிய துணைவர். காதலன், காதலி, நெருங்கி பழகும் துணைவர் அல்லது பாலியல் அல்லது காதல் உறவில் உள்ள யாராவது இதில் உட்படுவர். நீங்கள் யாருடன் சேர்ந்து ஒரு குழந்தையை பெற்றிர்களோ அவரையும் இது உள்ளடக்கும்.

### சட்ட உதவி அலுவலகம்

இந்த அலுவலகங்கள் குறைந்த வருமானம் உள்ள மக்களுக்கு சட்ட பிரதிநிதித்துவமும் பொது சட்ட விளக்கம் மற்றும் தகவல் சேவைகள் அளிக்கின்றன.

### அமைதிகாப்பு முறி

உங்கள் பாதுகாப்பு குறித்து உங்களுக்கு பயமாக இருந்தால், நீங்கள் அமைதிகாப்பு முறி பெற முடியும். குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த ஆணை தவறாக நடந்துக்கொண்ட நபர் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகளை கொண்டுள்ளது. உதாரணமாக, உங்களை பார்ப்பதற்கு, கடிதம் எழுதுவதற்கு அல்லது தொலைபேசியில் பேச அந்நபருக்கு தடை விதித்தல். மோசமாக நடந்துகொண்ட நபர் ஆணைகளுக்கு கீழ்படியா விட்டால் போலீஸ் அவரை

கைது செய்யக்கூடும். சமாதான உடன்படிக்கை குறித்து அதிகம் அறிய விரும்பினால் ஒரு வழக்கறிஞரை அணுகுங்கள்.

### ஊறுபாட்டை அடுத்த உளவழுத்தக் கோளாறு (PTSD)

சித்திரவதை, வன்புணர்ச்சி, கொலைகள், துர்ப்பிரயோகம், மற்றும் பிற வகையான வன்முறை போன்ற கொடுமையான சம்பவங்களை கண்ணுறுவதால் அல்லது அனுபவிப்பதால் ஏற்படும் கடுமையான ஏக்க கோளாறு தான் இது. அன்றாட வாழ்க்கை குறித்த தொடர்ச்சியான பயம் மற்றும் கவலையை ஓர் ஏக்க கோளாறு என்றழைக்கலாம். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் சிலருக்கு PTSD உண்டாகலாம். பூகம்பம் போன்ற இயற்கை சீற்றங்களை கடந்து வந்தவர்களுக்கும் PTSD ஏற்படலாம். PTSD-யுடைய மக்களுக்கு கடந்தகால நினைவுகள் (கொடூரமான சம்பவங்களின் நினைவுகள்) அவை ஏற்பட்ட பல நாட்கள் ஆனபின்னரும் ஏற்படலாம். அதன் காரணமாக அன்றாட வாழ்க்கையில் பொருந்திப்போவது கடினமாக இருக்கலாம். பொதுவாக PTSD-வுள்ள மக்களுக்கு அவற்றிலிருந்து கடைத்தேற நிபுணர்களின் உதவி தேவைப்படும்.

### நன்னடத்தை கண்காணிப்பு

குற்றம் செய்த ஒருவருக்கு (தவறு செய்தவருக்கு) வழங்கப்படும் தீர்ப்பின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய குற்றவியல் நீதிமன்ற ஆணையாகும். நன்னடத்தை கண்காணிப்பில் உள்ள ஒரு நபர் விடுதலையாகும் போது ஆலோசனை மையத்திற்கு செல்லவேண்டும் என்பது போன்ற நிபந்தனைகளுக்கு கீழ்பட்டிருக்க வேண்டும்.

### பாதுகாப்பு ஆணைகள்

ஒரு நபர் மற்ற நபரை தொடர்பு கொள்வதை தடுக்க வழிவகை செய்யும் பல் வேறு குடிசார் (குற்ற சார்பற்ற) பாதுகாப்பு ஆணைகள் இருக்கின்றன. தொடர்பு தடை ஆணைகள் அல்லது கட்டுப்படுத்தும் ஆணைகள் எனவும் இவை சில நேரங்களில் அழைக்கப்படுகின்றன. மேலும்,அவசர பாதுகாப்பு ஆணைகள் அல்லது அவசர தலையிட்டு ஆணைகள் பெரும்பான்மையான மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் குறிப்பிட்ட குடும்ப வன்முறை

சட்டத்தின் கீழ் கிடைக்கின்றன. பாதிக்கப்பட்டவருக்கு தற்காலிகமாக வீட்டில் அவர் மாத்திரம் இருக்கும் உரிமை, துர்ப்பிரயோகம் செய்பவரை வீட்டிலிருந்து அகற்றுதல்; பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு ஒரு வரம்பு வைத்தல் மற்றும் பிற தற்காலிக தீர்வுகளையும் அவை வழங்கலாம்.

### தண்டனை தீர்ப்பு

ஒருவர் குற்றம் செய்தது உறுதிசெய்யப்பட்டால் என்ன தண்டனை கொடுப்பது என நீதிபதி எடுக்கும் தீர்மானம் தான் தீர்ப்பு. குறிப்பிட்ட காலம் சிறையில் இருப்பது அல்லது தண்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது தான் தீர்ப்பு.

### பாலியல் தாக்குதல்

இன்னொருவரின் சம்மதமின்றி அவருடன் எந்த விதத்திலும் பாலியல் ரீதியாக தொடர்பு கொள்ளுதல் அல்லது தொடுதல் பாலியல் தாக்குதல் ஆகும். வருடுதல் முதல் பாலியல் வல்லுறவு வரையான செயல்கள் பாலியல் தாக்குதலுள் அடங்க வல்லவை. ஒருவர் பலவந்தத்துக்கு அல்லது அச்சத்துக்கு அல்லது வஞ்சனைக்கு உட்பட்டு கொடுக்கும் சம்மதத்தை, அவர் உண்மையாக கொடுக்கும் சம்மதமாக கொள்ள முடியாது. மௌனம் சம்மதமாகாது. உறங்குபவர் அல்லது உணர்விழந்தவர் சம்மதம் கொடுக்க முடியாது. பாலியல் செயற்பாட்டில் ஈடுபட சம்மதம் கொடுக்கும் வயது 16 ஆகும். எனினும் சம்பந்தப்பட்ட பிள்ளையின் வயதை நெருங்கிய வயதுடைய ஒருவர் சம்பந்தப்பட்டால், சில விதிவிலக்குகள் உண்டு.

### துணைவர் துர்ப்பிரயோக கொள்கைகள்

கொள்கைகள் என்பது ஒரு நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் பின்பற்ற வேண்டி அந்நிறுவனம் உருவாக்கியுள்ள விதிகளாகும். கனடா முழுவதிலும் போலீஸ் துறையை ஆட்சி செய்யும் பல் வேறு நிறுவனங்கள் தங்கள் போலீஸ் அலுவலர்கள் பின்பற்றும் படிக்கு கொள்கைகளை உருவாக்கியுள்ளன. போலீஸ் அலுவலர்கள் துணைவர் துர்ப்பிரயோகத்தை கடுமையாக கையாளுவதை உறுதிசெய்யும் பொருட்டு இது செய்யப்படுகிறது. துணைவர் துர்ப்பிரயோக கொள்கைகளின் பொருள்: துர்ப்பிரயோகம் செய்யும் நபர் சட்டத்தை மீறுவதை

ஒரு போலீஸ் அலுவலர் கண்டால், பாதிக்கப்பட்ட நபர் நடவடிக்கை மேற்கொள்வதை விரும்பாவிட்டாலும் போலீஸ் அலுவலர் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

### கண்காணிக்கப்படும் பரிமாற்றம்

பெற்றோர் சேர்ந்து வாழவில்லை என்றாலும் பெற்றோர் இருவரையும் குழந்தை பார்க்க வேண்டும். ஒரு பெற்றோரிடமிருந்து மற்றவரிடம் குழந்தை செல்வதை "பரிமாற்றம்" என குறிப்பிடுகிறோம். இந்த பரிமாற்றம் கண்காணிக்கப்படும் போது மற்றொரு பெரியவர் மேற்பார்வையில் இது நடக்கும். அந்நபர் குழந்தை அல்லது பெற்றோருக்கு இந்த பரிமாற்றத்தின் போது எந்த அசம்பவிதமும் நேராத படி பார்த்துக்கொள்வார். சில நேரங்களில் பெற்றோருக்கிடையே துர்ப்பிரயோகம் இருந்தால் பரிமாற்றம் ஒரு ஆபத்தான நேரமாக இருக்கக்கூடும். மேற்பார்வை செய்பவர் பரிமாற்றம் பாதுகாப்பாக நடப்பதை உறுதி செய்வார்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள்

பாதிக்கப்பட்டவர்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகள் குற்ற செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவையும் வசதிவாய்ப்புகளையும் வழங்க முடியும். நீதிமன்ற முறை குறித்த தகவல்களையும் அவர்கள் அளிக்க முடியும்.

குற்ற செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாகாணமும் பிரதேசமும் அதன் திட்டங்களையும் சேவைகளையும் அளிக்கின்றனர்.

# குறிப்புகள்

அட்டை கலைவேலைப்பாடு, விளக்கப்படங்கள்:
The Bytown Group

இதயமும் கண்ணீர்த்துளியும்
இதயத்துக்கும் கன்ணீர்த்துளிக்கும் இடையே
இடப்பட்டுள்ள “x” அடையாளம் அவற்றை
இணைக்கிறது. நம்பிக்கை, அன்பு, உதவி
என்பவற்றுக்கு இடைப்பட்ட உறவையும் (இதயத்தை),
துர்ப்பிரயோகத்தால் விளையும் வேதனையையும்
வருத்தத்தையும் (கண்ணீர்த்துளியை) அது உணர்த்துகிறது.

## ABUSE IS WRONG IN ANY LANGUAGE

La maltraitance est inacceptable peu importe la langue

Waxyeeladu waa khalad luqad walba

El abuso es condenable en cualquier idioma

**Жестокое обращение недопустимо на любом языке**

학대는 언어를 막론하고 그릇된 것입니다

بدسلوکی کسی بھی زبان میں غلط ہے

بد رفتاری در هر زبان غلط است

துர்ப்பிரயோகம் என்பது எந்த மொழியிலும் தவறுதான்

إساءة المعاملة مرفوضة في جميع اللغات

虐待是有悖文明的恶行

ਦੁਰਵਿਵਹਾਰ ਕਿਸੇ ਵੀ ਭਾਸ਼ਾ ਵਿੱਚ ਗ਼ਲਤ ਹੈ।